
# மாணவ மணிகளுக்கு..



வாலிபரின் கடிதங்களுக்கு ஒரு
கட்டிடப் பொறியியலரின் பதில்கள்

R. STANLEY,
B.E.,M.Tech.

# மாணவ மணிகளுக்கு...

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
*<bym@sancharnet.in>*
*www.BlessingYouthMission.org*

**TO DEAR STUDENTS...** (Tamil)

Copyright 1982 R. STANLEY

First Edition : May 1982
This Tenth Edition : December 2009

This book is available in English
and several Indian vernaculars also.

## *ஆசிரியரைச் சந்தியுங்கள்...*

தென் தமிழகத்தில் மேற்கத்திய மிஷனரிப்பணியினால் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்ட நாசரேத் என்ற சிற்றூரில் இறைப்பற்று நிறைந்த பெற்றோருக்கு மூத்த பிள்ளையாய் ஆசிரியர் பிறந்தார். 1962ஆம் ஆண்டு கல்லூரிக்குள் நுழைந்தபோது அவர் மறுபடியும் பிறந்தார். 1968ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் கட்டிடப் பொறியியல் பட்டமும், 1970இல் சென்னை இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரியில் (IIT) முதுநிலைப் பட்டமும் பெற்றார். திருச்சியிலுள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் (REC) சிறிது காலம் ஆசிரியராய் இருந்த பின்னர், மிஷனரி டாக்டர் ஐடா ஸ்கடர் அம்மையார் அவர்கள் வேலூரில் நிறுவிய கிறிஸ்தவ மருத்துவமனையில் 1975 வரை மருத்துவமனைப் பொறியியலராய்ப் பணி யாற்றினார்.

1963இல் சகோதரன் ஸ்டான்லி மாணவர் நடுவில் துவங்கிய திருப்பணி 1971இல் தேசிய அளவிலான எழுப்புதல் மற்றும் மிஷனரிப்பணி இயக்கமாய் உருவெடுத்தது. அது இப்பொழுது (2004) 300க்கும் அதிக மான முழுநேரத் திருப்பணியாளர் மற்றும் பலநூறு தன்னார்வ வாலிபர், நங்கையர் குழுக்கள் மூலம் இந்தியாவின் 13 மாநிலங்களில் சேவை புரிகிறது. சகோதரன் ஸ்டான்லியின் மனைவி Dr. லில்லியன் அவர்கள் தரித்திரத்திலும் தரித்திரத்தில் வாடும் மக்கள் நடுவில் மருத்துவ மிஷனரியாய்த் தொண்டாற்றுகிறார்கள். இவர்களது ஒரே பிள்ளையும் குமாரத்தியுமான இவாஞ்சலின் தனது கணவருடன் ஒரு மனோதத்துவ ஆலோசகராய் வேலூர் CMCயில் வேலை செய்கிறாள்.

சகோதரன் ஸ்டான்லி ஒரு தெளிந்த திருமறைப் போதகர், வல்லமை யான எழுப்புதல் பிரசங்கி, உருக்கமாய் மிஷனரிப்பணிக்குச் சவாலிடுபவர், உற்சாகமாய் வாலிபரைத் தட்டி எழுப்புபவர், நடைமுறைப் பயிற்சி தருபவர், நல்ல எழுத்தாளர், மற்றும் ஆசாபாசமான நண்பர். அவரது வாழ்க்கை யினாலும் பணியினாலும் தொடப்பட்ட அநேகர் திருச்சபை மேய்ப்பர் களாகவும், மிஷனரிகளாகவும், தலைவர்களாகவும் உலகின் பல்வேறு பகுதிகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனர். சகோதரனது கனிகள் நிலைத்திருக்கின்றன. ஆசீர்வாத இளைஞர் இயக்கத் திற்கு நிர்வாகத் தலைவராக இருந்த அவர், தனது மனைவியோடு மிஷனரிப் பணிக்களங்களிலும் பல ஆண்டுகள் குடியிருந்து உழைத்திருக்கிறார். உலகின் பல நாடுகளுக்குச் சென்று மாநாடுகளிலும் கருத்தரங்கு களிலும் இவர்கள் இறைமக்களை ஊக்குவித்திருக் கின்றனர். சகோதரனது புத்தகங்கள் பத்துக்கும் மேற்பட்ட



இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. அவரது தினசரித் தியான நூலாகிய *"நாளொரு மேனி"* (Better Everyday) ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த படைப்பாகும். கிறிஸ்துவின் திருவுடலாம் திருச்சபைக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டினைப் பாராட்டி சென்னை இந்துஸ்தான் வேதாகமக் கல்லூரி (HBI) 2000ஆம் ஆண்டில் Doctor of Divinity என்ற பட்டத்தை அவருக்கு வழங்கி கவுரவித்தது.

1996இல் சகோதரனுக்கு இருதய அறுவை சிகிச்சை நடந்தது. இப்போது நல்ல சுகத்துடன் இருக்கிறார். முழுநேர அலுவலர் என்ற வகையில் அவர் 2003இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், பிரசங்கிப்பதைவிட வாசிப்பதிலும் எழுதுவதிலுமே அதிகக் கவனமும் நேரமும் செலவிடுகிறார். தனது வாழ்நாளின் உசிதமான வாலிபப் பிராயம் முழுவதையும் இறையரசிற்கென வார்த்துவிட அருள் புரிந்த இறைவனது பொற்பாதங்களை அவர் ஓயாமல் முத்தம் செய்கிறார். அவருக்கு மிகவும் பிடித்தமான திருவசனம்: 1 கொரிந்தியர் 15:10, "நான் இப்படி இருப்பது இறையருளினாலேயே!"

# முன்னுரை

"இன்றைய இளைஞர் நாளையத் தலைவர்" என்பதைவிட
"இன்றைய இளைஞரே இன்றையத் தலைவர்" என்பதே சரி.

"இளைஞர் நினைத்தால் இரு துருவங்களையும் இணைத்துவிடுவர்"
என்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன்.

ஆனால்,

தன்னைப் படைத்தவரை இளமையில்
நினைக்காமற்போகிறவன் நினைக்கப்படாமற் போவான்.

இன்றைய மாணவருக்கு வகுப்பறை தருவது அறிவு;
இறைவனும் இறைநூலும் தருவதோ ஞானம்.
அறிவைப் பயன்படுத்தும் முறைக்கே ஞானம் என்று பெயர்.
ஞானமில்லா அறிவே மாணவர் பலரின் சோக நிலை.

எனவேதான்,

அறிவுக் களஞ்சியமாம் புத்தகங்களை அடக்கியுள்ள
நூலகக் கட்டிடத்தின் கண்ணாடி ஜன்னல்மீது கல்லெறிகிறார்கள்!

பள்ளிக்கோ, கல்லூரிக்கோ தங்களைச் சுமந்துவரும்
பேருந்துகளைக் கொளுத்துகிறார்கள்!

தங்களுக்குக் கற்றுத்தரும் ஆசிரியரைத் தூற்றுகிறார்கள்!

இன்னும்...!

இக்குறைக்குப் பரிகாரம் தருவது அறிவாளிகளில் எல்லாம்
அறிவாளி சாலமோன் என்ற அரசனின் கூற்று–

"ஆண்டவருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்."

நடைமுறையில் இதை விளக்குவதே இச்சிறு நூல்.

படிப்பீர்!
பயிற்சிப்பீர்!
பகர்வீர்!
பயனடைவீர்!

*—ஆசிரியர்*



*இக்கடிதங்களில் வரும் பெயர்கள், இடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், சம்பவங்கள் யாவும் கற்பனையே!*

## கடிதங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | சோதனை அலைகள்! | ... | 8 |
| 2. | ஒரே கேலி! | ... | 10 |
| 3. | வர வர dull! | ... | 12 |
| 4. | புகைப்பது கூடாதா? | ... | 14 |
| 5. | போதை! போதை! | ... | 16 |
| 6. | கண்ணை அடக்கமுடியவில்லையே! | ... | 18 |
| 7. | காதலித்தால் என்ன? | ... | 20 |
| 8. | சுயபுணர்ச்சியை விடுவதெப்படி? | ... | 22 |
| 9. | வீட்டில் எதிர்ப்பு! | ... | 24 |
| 10. | நண்பரை விடவேண்டுமோ? | ... | 26 |
| 11. | படிக்க முடியவில்லையே! | ... | 28 |
| 12. | உடல் பலக்குறைவு! | ... | 30 |
| 13. | பைபிள் படிப்பது எப்படி? | ... | 32 |
| 14. | மாணவப் பருவத்தில் ஸ்டான்லி! | ... | 34 |
| 15. | மீன் பிடிப்பது எப்படி? | ... | 36 |
| 16. | விஞ்ஞானமா, விவிலியமா? | ... | 38 |
| 17. | மாணவர் போராட்டம்! | ... | 42 |
| 18. | டெலிவிஷன் பார்க்கலாமா? | ... | 44 |
| 19. | பழைய நினைவுகள்! | ... | 46 |
| 20. | எதிர்காலம் எப்படியோ? | ... | 48 |




**கடிதம் 1**

# சோதனை அலைகள்!

*அன்பு அண்ணா,*

*வாழ்த்துக்கள்!*

*சமீபத்தில் நீங்கள் நடத்திய மாணவர் மலர்ச்சி முகாமில் பங்கு பெற்றவர்களில் நானும் ஒருவன். நான் கல்லூரியில் முதலாண்டு படிக்கிறேன். என்னைப்போன்ற மாணவருக்கு உங்கள் முகாம் மிகப் பயனுள்ளதாயிருந்தது என்பதில் சந்தேகமேயில்லை. நீங்களும், மற்ற அண்ணன்மாரும் ஆற்றிய சொற்பொழிவுகள் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. என்னையே மறந்து முகாமில் நீங்கள் அறிமுகம் செய்த இயேசு நாதருக்கு என்னை அர்ப்பணித்துவிட்டேன். ஏதோ மேலோகமே இறங்கி வந்து என் இதயத்தை நிரப்பிவிட்டது போலிருந்தது. மறக்க முடியா அனுபவம்!*

*ஆனால்,*

*கல்லூரிக்குத் திரும்பி வந்ததும் ஒரே பிரச்னை. இனி நல்வாழ்வு நடத்தவேண்டுமென்ற தீர்மானத்துடன் திரும்பிய எனக்கு ஒரே குழப்பம். விடுதியிலுள்ள சோதனைகளெல்லாம் என்னையே நோக்கிப் பாய்கின்றன போலும்! முகாமில் இருந்த உற்சாகம் இப்போது இல்லை. "முகாமில் நடந்ததெல்லாம் வெறும் வெத்துவேட்டு, அதையெல்லாம் நம்பாதே" என்று யாரோ என்னிடம் சொல்லிக்கொண்டே இருப்பதுபோலிருக்கிறது. எனக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. எனவேதான் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். உடன் பதில் எழுதுவீர்களா? ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். நான் இப்பொழுது என்ன செய்யவேண்டுமென்று விளக்கமாக எழுதுங்கள்.*

*உங்கள் தம்பி,*
*மோகன்*

**தம்பி மோகனுக்கு,**

உனது மடலுக்கு நன்றி.

முகாமில் ஒரே குதூகலம்; திரும்பிய பின்னரோ ஒரே குழப்பம் என்று எழுதியிருந்தாய். இயேசு நாதருக்கு நீ உன்னை அர்ப்பணித்துள்ளாய் அல்லவா? அப்படியானால், அவர் உனக்குச் சொல்வதைக் கேள்—

"உங்கள் இருதயம் கலங்கவேண்டாம்" (யோ 14:1).

"உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. ஆனாலும் தைரியமாயிருங்கள்; நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன்" (யோ 16:33).

உனக்கு ஏன் முன்னைவிட இப்பொழுது சோதனைகள் அதிகம் தெரியுமா? இயேசுவின் பாதபடிக்கு வந்துசேருமுன் நீ சாத்தானுக்கு அடிமையாயிருந்தாய். இப்போது நீ இயேசுவின் பிள்ளையானதும் அவனுக்கு உன்மீது கோபம் வராமல் இருக்குமா? உன்னை எப்படியாவது விழத்தள்ளி மறுபடி உன்னை அவன் பக்கம் இழுத்துவிட அவன் தன்னால் ஆனது அத்தனையும் செய்யத் தான் செய்வான். ஆனால் உலகிலிருப்பவனிலும் உன்னிலிருக்கிறவர் பெரியவர் என்று திருமறை கூறுகிறது (1 யோ 4:4).

கிறிஸ்தவ வாழ்வு ஒரு போராட்டம்தான். ஆனால் வெற்றி நமதே. இறைவன் தமது வேதத்தில் கூறியுள்ளதைப் பார்—

"நாம் அநேக வேதனைகள் வழியாகவே இறையரசுக்குள் நுழைய வேண்டும்" (அப் 14:22).

"கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்பும் யாவரும் இன்னலுறுவர்" (2 தீமோ 3:12).

"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகம்; ஆண்டவர் அவையெல்லா வற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார்" (சங் 34:19).

யாரோ உன் மனநிலையைக் குழப்பி எதையோ சொல்லிக்கொண்டிருப்பது போல் தெரிகிறது என்று குறிப்பிட்டிருந்தாய். அதுதான் சாத்தானின் சத்தம். அவன் ஒரு வஞ்சகன், அவன் பொய்யன். "அப்பாலே போ, சாத்தானே. நான் இயேசுவின் வார்த்தைகளையே நம்புவேன்" என்று சொல்லிவிடு. நீ எதிர்த்துவிட்டால் அவன் ஓடிவிடுவான். கொஞ்சம் இடம்கொடுத்துவிட்டாலோ கூடாரம் போட்டுவிடுவான். கவனமாயிரு!

காலையும் மாலையும் தவறாது வேதம் வாசித்துப் பிரார்த்தனை செய். உனக்காக நாங்களும் இறைவனை வேண்டுகிறோம்.

அன்பின் வாழ்த்துக்களுடன்,
உன் அண்ணன்.



**கடிதம் 2**

# ஒரே கேலி!

*அருமை அண்ணா,*

*நான் சமீபத்தில் உங்களைச் சந்தித்தபோது நீங்கள் எனக்குத் தந்த அறிவுரைகளுக்காக என் மனமார்ந்த நன்றி.. குறிப்பாக நான் இயேசுவைச் சேர்ந்துவிட்டேன் என்று கல்லூரியில் தயங்காமல் அறிவிக்கவேண்டு மென்று திரும்பத் திரும்ப அழுத்திச் சொன்னீர்கள். "விளக்கைக்கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், யாவருக்கும் அது வெளிச்சம் தரும்படி, அதை விளக்குத் தண்டின்மேல் வைக்க வேண்டும்" என்று நீங்கள் இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் எடுத்துக்காட்டியது என்னை அதிகமாக உணர்த்தியது. இங்கு விடுதிக்கு வந்ததும் எனது அறை நண்பர்களுக்கும் மற்ற உடன் மாணவர் சிலருக்கும் இயேசு என்னை மாற்றியதைச் சொல்லத் துவங்கினேன். அதன் விளைவு நான் எல்லாருக்கும் கேலியாகிவிட்டேன். எனக்கு "சாமியார்" என்று பட்டம் சூட்டிவிட்டார்கள். □□□□□□ □□□□க்கு நான் போகும்போது "இதோ, சாமியார் வருகிறார்" என்று அவர்களுக்குள் பேசிக்கொள்வது என் காதில் விழுகிறது. இது என் மனதில் பெரும் சோர்பை உண்டாக்கிவிட்டது. "நான் உண்டு, கடவுள் உண்டு" என்று இருந்தால் போதாதா என்றெல்லாம் எனக்குள் கேள்வி எழும்புகிறது. நான் என்ன செய்ய?*

*நான் எழுதியிருப்பதில் பிழையேதுமிருந்தால் பொறுத்துக்கொள் ளுங்கள். பதில் எழுதுவீர்கள் என்று எண்ணியே இக்கடிதத்தை எழுதுகிறேன்.*

*உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்நோக்கும்,*

*தம்பி,*
*விஜயன்.*

**அன்புத் தம்பி விஜயனுக்கு,**

உன் மடல் கிடைத்தது. நன்றி.

உன் நண்பர்கள் உன்னைக் கேலி செய்வது உனக்குப் பெரும் சோர்பை உண்டாக்கிவிட்டது என்று எழுதியிருந்தாய். கிறிஸ்தவ வாழ்வில் கேலியெல்லாம் "கொசுக்கடி" போன்றது. இதற்கெல்லாம் பயந்துவிட்டால் எப்படி ?

இயேசுவைப் பின்பற்றி நிலையான வாழ்வைக்கண்டுகொள்வோர் எப்பொழுதுமே மைனாரிட்டி என்று இயேசுதாமே சொல்லியிருக்கிறார். சாத்தானைப் பின்பற்றி உலகச் சிற்றின்பங்களில் திளைத்திருக்கும் மெஜாரிட்டியினருக்கு உன்னைப் பார்த்தால் வினோதமாகத்தானிருக்கும். பைபிள் முழுவதிலும் இதற்குச் சான்றுகளைக் காணலாம்.

இயேசு கிறிஸ்துவை எப்படிக் கேலிபண்ணினார்கள் என்று மத்தேயு 27:29, 39-43இல் பார்.

திருத்தொண்டன் பவுலுக்கும் இதே பாடுதான். "நாங்கள் உலகத்துக்கும் மனிதருக்கும் வேடிக்கையானோம்" என்று அவர் எழுதுகிறார் (1 கொரி 4:9).

எனவே தம்பி, உனக்கு நடப்பதை ஏதோ புதுமையென்று எண்ணிவிடாதே. ஆனால் பிறர் உன்னைக் கேலிசெய்யும்போது நீ எப்படி நடந்துகொள்ளுகிறாய் என்பதுதான் முக்கியம்.

1. கேலி செய்யப்படும்போது மகிழ்ச்சியோடு இறைவனைப் போற்றிப் பழகு. "ஏனெனில், கிறிஸ்துவை நம்புகிறதற்கு மட்டுமல்ல, அவருக்காகப் பாடுபடவும் நமக்கு அருள் கொடுக்கப்பட்டிருக்கிறது" (பிலி 1:29).

2. கேலி செய்வோர்மீது எரிச்சலடையாது பார்த்துக்கொள். புன்முறுவல் பூத்திடு. அவர்களைத் தொடர்ந்து நேசி. அவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்கும்படி அவர்களுக்காக வேண்டிடு (அப் 5:41; மத் 5:11,12,44; லூக் 23:34).

3. நீ செல்லும் பாதைதான் சரி என்று உனக்குத் தெரியுமல்லவா ? அப்படியானால் மற்றவரது கேலி உனக்கு இன்னும் கூடுதல் உற்சாகத்தைத்தான் தரவேண்டுமே தவிர அது உன்னை உட்கார வைக்கக்கூடாது. நோவா அன்று அப்பெரிய கப்பலைச் செய்துகொண்டிருக்கும்போது எல்லாரும் கேலிதான் செய்திருப்பார்கள். ஆனால் நடந்தது ?

முடிவாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். யார் உன்னை அதிகமாய்க் கேலி செய்கிறார்களோ அவர்கள்தான் பொதுவாகச் சீக்கிரம் கிறிஸ்துவிடம் திரும்புவார்கள். விடாதே !

"*எதிர்நீச்சல் வாலிபர்*" என்ற எனது புத்தகத்தை வாங்கி வாசி.

உனக்காக ஜெபிக்கும்,
அண்ணன்.



**கடிதம் 3**

# வரவர DULL!

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*இந்தக் கடிதத்தின் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் பெரு மகிழ்ச்சி.*

*சென்ற மாதம் எங்கள் ஊரில் மாபெரும் நற்செய்திக் கூட்டமொன்று நடந்தது. "இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புவோர் முன்வருக" எனக் கடைசி நாளில் அழைப்பு தரப்பட்டபோது கண்ணீர் ததும்ப நானும் முன்சென்றேன். கடந்தகாலப் பாவ வாழ்வின் உணர்வு என்னைத் தலைகுனியச் செய்தது. "இயேசுவே, என்னை ஏற்றுக்கொள்ளும்" எனக் கதறிய வேளையில்தானே ஏதோ ஒரு பெரிய பாரம் என்னைவிட்டு அகன்றுவிட்டதாக உணர்ந்தேன். ஆனந்தக்கடலில் குதித்துவிட்டது போலிருந்தது. கூட்ட முடிவில் "என்ன என் ஆனந்தம், என்ன என் ஆனந்தம், சொல்லக்கூடாதே; மன்னன் கிறிஸ்து என் பாவத்தையெல்லாம் மன்னித்துவிட்டாரே" என்று யாவரும் பாடிய வேளையில் என்னை மறந்து நடனமுமாடிவிட்டேன் என்று நினைக்கிறேன். கூட்டம் முடிந்து அடுத்த ஒரு வாரம் ரொம்ப நன்றாக இருந்தது. ஆனால் இப்போது வர வர ▯▯▯▯ஆக இருக்கிறது. எல்லாமே ரொம்ப சாதாரணமாகத் தெரிகிறது. இது இப்படித்தானிருக்குமா, அல்லது நான்தான் ஏதும் தவறு செய்துவிட்டேனோ என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் நண்பன் டிக்சனிடம் கேட்டேன். அவன் உங்களுக்கு எழுதச் சொன்னான். தயவுசெய்து பதில் எழுதி உதவுங்கள். நன்றி.*

*இங்ஙனம்,*
*உங்கள் உதவி நாடும்,*
*ரிச்சர்டு.*

**அன்புள்ள ரிச்சர்டு,**

உன் கடிதம் கிடைத்தது. உங்கள் ஊரில் நடந்த கூட்டத்தில் உனக்குக் கிடைத்த ஆசீர்வாதமான அனுபவத்திற்காக நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது உனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் ஏறத்தாழ புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட எல்லாருக்குமே வருவதுண்டு. கலங்கிவிடாதே.

கிறிஸ்தவ வாழ்க்கையின் அனுபவங்கள் எல்லாவற்றிலும் மூன்று நிலைகள் உண்டு—

1. உண்மை Fact
2. நம்பிக்கை Faith
3. உணர்வுகள் Feelings

இந்த நிலைகளின் வரிசைதான் மிகவும் முக்கியம். முதலாவது வருவது "உண்மை" அல்லது "சத்தியம்." சத்தியத்தை நமக்குத் தருவது திருமறையே. வேதமே சத்தியம். கடவுளது கட்டளைகள் எல்லாமே உண்மை (சங் 119:142,151). உனது இரட்சிப்பின் அனுபவத்தைப் பொறுத்தவரையில் வேதம் கூறும் சத்தியம் என்ன ?

"கிறிஸ்து இயேசுவின் பெயரில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கடவுளுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு உரிமை கொடுத்தார்" (யோ 1:12).

"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்தமாக்கும்" (1 யோ 1:7).

இதை அடுத்து வருவது உனது "விசுவாசம்" அல்லது "நம்பிக்கை." சத்தியத்தை யாரும் நம்பினாலும் நம்பாவிட்டாலும் சத்தியம் சத்தியம்தான். "சிலர் விசுவாசியாமல் போனால் என்ன ? அவர்களுடைய அவிசுவாசம் கடவுளை நம்பத்தகாதவர் என ஆக்கிவிடுமோ ? அப்படியாக்கமாட்டாது" (ரோ 3:3,4).

இந்த விசுவாசத்தை அடுத்து மூன்றாவது வருவதுதான் "உணர்வுகள்" என்பது. இந்த உணர்வுகள் நிலையானவை அல்ல. அவை மாறிக்கொண்டேயிருக்கும். உனது உணர்வுகள் எதுவாயிருந்தாலும் அது உண்மையை மாற்றமுடியாதே. அப்படியானால் நீ நம்பவேண்டியது சத்தியத்தைதானே தவிர உணர்வுகளை அல்ல. நீ கடவுளுடைய பிள்ளையாயிருக்கிறாய் என்று அவரது ஆவியானவர் உனது உள்ளத்தில் சான்று பகர்கிறார் அல்லவா ? (ரோ 8:16). அதற்குமேல் உனக்கு என்னவேண்டும் ?

பிசாசின் போதனை என்ன தெரியுமா ? முதலாவது உணர்வுகள்; அதையே விசுவாசிக்கவேண்டும்; அதைப் பொறுத்துதான் சத்தியம் என்பது. இது தலைகீழ் வரிசை. என்றுமே சரியான வரிசையை மறந்துவிடாதே: Fact first, Faith next, Feelings last.

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்.

அன்புடன்,
அண்ணன்.



**கடிதம் 4**

# புகைப்பது கூடாதா?

*அன்புள்ள சகோதரன் அவர்களுக்கு,*

*கடந்த மாணவர் மலர்ச்சி முகாம் முடிந்ததும் உங்களைத் தனியாகச் சந்தித்து உங்களோடு புகைப்படம் ஒன்று எடுத்துக்கொண் டது உங்களுக்கு நினைவிருக்கும். முகாமில் கடவுள் எனக்குச் செய்த நன்மைகளை நினைக்கும்போதெல்லாம் என் உள்ளம் நன்றியால் நிரம்புகிறது.*

*குறிப்பாக, எட்டாம் வகுப்பிலிருந்து பீடி, சிகரெட் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாயிருந்த என்னை இயேசு விடுவித்தார். எனக்கு வீட்டில் கிடைக்கும் □□□□□□□ □□□□□யை எல்லாம் சிகரெட்டுக்குத்தான் செலவழிப்பேன். என் □□□□ □□□□உம் ஒரு □□□□□ □□□□□□□. அவனுக்குத் தெரிந்தவர்கள் பலர் அயல்நாட்டில் இருப்பதால் அவன் எனக்கு அடிக்கடி □□□□□□□□ சிகரெட்டும் தருவான். எங்கள் ஊரில் யாராவது சிகரெட்டு குடிப்பது கூடாது என்று பிரசங்கத்தில் சொன்னால் என்னால் அதை ஒத்துக்கொள்ளவே முடியாது. அப்பழக்கத்தை என்னால் விடமுடியாமலிருந்தது இன்னொரு காரணம். முகாமுக்கு வந்திருந்தபோதும் முதல் நாளில் கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கும்போதே வெளியே போய் மரத்தடியில் நின்று ஒரு சிகரெட்டு குடித்துவிட்டுத்தான் உள்ளே வந்தேன். இதற்கு வசதியாக பந்தலின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தேன். ஆனால் இரண்டாம் நாளில் "நான் ஒரு பாவி" என்று கதறி இறைவனிடம் என்னை ஒப்படைத்தேன். அதற்குப் பிறகு இன்றுவரை என்னால் பீடி சிகரெட்டைத் தொடவே முடியவில்லை. என்னையறியாத ஒரு வெறுப்பு அதன்மீது வந்துவிட்டது. இதை நான் என் முன்னாள் சிகரெட்டு நண்பர்களிடம் கூறும்போது அவர்கள் என்னோடு அதிகமாய் விவாதிக்கிறார்கள். "நீ விட்டதைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமில்லை; ஆனால் புகைப்பழக்கம் கூடாது என்று பைபிளில் எங்கேயிருக்கிறது?" என்று பலவாறு கேள்விகள் கேட்டு என்னை மடக்குகிறார்கள். "முன்னே அடிமையாயிருந்தேன்; இப்பொழுது விடுதலை அடைந்திருக்கிறேன்" என்றுதான் எனக்குச் சொல்லத் தெரிகிறதே தவிர அவர்கள் கேள்விகளுக்கு வேதத்திலிருந்து பதில் தர முடியவில்லை. நீங்கள் இதுபற்றி எனக்கு விளக்கமாக ஒரு கடிதம் எழுதுவீர்களா? சிரமத்திற்கு மன்னியுங்கள்.*

*அன்பின் வாழ்த்துக்களுடன்,*
*விக்டர்.*

**அன்புள்ள விக்டர்,**

உன் கடிதத்தை இங்குள்ள மற்ற அண்ணன்மாரிடம் காட்டினேன். இயேசுவின்மூலம் உனக்குக் கிடைத்த விடுதலைக்காக யாவரும் மகிழ்ச்சி யோடு அவரைத் துதித்தோம். புகை பிடிப்பது தவறு என்று பைபிளிலிருந்து உனது நண்பருக்குக் காட்ட விளக்கம் கேட்டு எழுதியிருந்தாய். சில குறிப்புகளைத் தருகிறேன்.

**1.** எந்த சிகரெட்டு பெட்டியை எடுத்துப்பார்த்தாலும், சிறிய எழுத்தில் கீழ்க்கண்ட வாசகத்தைக் காணலாம்—

Statutory warning: Cigarette smoking is injurious to health.

இது விஞ்ஞான ரீதியில் அகில உலக அளவில் மருத்துவர்களால் நிரூபிக்கப் பட்ட உண்மை என அறிவாய். நம்மைக் குறித்து கடவுளது விருப்பத்தை நாம் 3 யோவான் 2இல் காண்கிறோம்—

“பிரியமானவனே, உன் ஆன்மா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.”

அப்படியானால் புகைப்பது இறைச்சித்தத்திற்கு முற்றிலும் எதிரிடையான செயல்தானே ?

**2.** புகைப்பவர்களின் உதட்டைப் பார், பல்லைப் பார், கண்ணைப் பார், எவ்வளவு அலங்கோலமாகிவிடுகிறது! ஆனால் கடவுள் நமக்குக் கொடுத் துள்ள கட்டளை என்ன ?

“உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகளென்று அறியீர்களா ? ஆகை யால் கடவுளுக்கு உரியவைகளாகிய உங்கள் உடலினாலும் உங்கள் உள்ளத்தினாலும் அவரை மகிமைப்படுத்துங்கள்” (1 கொரி 6:15,20).

**3.** புகை பிடிப்பவர்கள் பெரும்பாலும் ஒருவித அடிமைத்தனத்துக்குள்தான் இருப்பார்கள். ஆனால் கிறிஸ்தவனின் உயரிய கோட்பாட்டைத் திருமறையில் இப்படி வாசிக்கிறோம்...

“எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமையுண்டு, ஆகிலும் நான் எதற்கும் அடிமையாகிவிடமாட்டேன்” (1 கொரி 6:12).

இவ்விதக் காரியங்களில் வெறுமனே விவாதம்பண்ணிக்கொண்டே போனால் அதற்கு முடிவேயிருக்காது. “தீதாய்த் தோன்றுகிற எல்லா வற்றையும்விட்டு விலகுங்கள்” என்று வேதம் போதிக்கிறது (1 தெச 5:22). எல்லாமே அதில் அடங்கிவிட்டதல்லவா ?

முடிவாக ஒன்று சொல்லுகிறேன். புகை பிடிப்பது தவறு என்ற வெறும் அறிவு ஒருவரையும் உண்மையாய் விடுவித்துவிடாது. இயேசு இவ்விதம் சொன்னார்—

“கிறிஸ்து உங்களை விடுதலையாக்கினால் உண்மையாகவே விடுதலை யாவீர்கள்” (யோ 8:36).

உனது அனுபவமும் இதுதானே. கடவுள் உன் சாட்சியை ஆசீர்வதிப்பார்.

உன் அன்புச் சகோதரன்.



**கடிதம் 5**

# போதை! போதை!

*அன்புள்ள அண்ணன்,*

*போன வாரம் நீங்கள் எங்கள் கல்லூரி விடுதிக்கு வந்து என்னை யும், இங்குள்ள “இயேசுவுக்கு மாணவர்” குழு அங்கத்தினர்களையும் சந்தித்துச் சென்றது எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாயிருந்தது. குழு அங்கத்தினர் யாவரும் உங்கள் வருகைக்கு மிகவும் நன்றி தெரிவிக் கிறார்கள்.*

*இந்தக் கடிதத்தை எனக்கு அடுத்த அறையிலிருக்கும் ராஜ்குமார் என்ற □□□ □□□□ □□□□□□□க்காக எழுதுகிறேன். இவர் ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பத்திலிருந்து வருபவர். யாவரோடும் நல்ல பண்போடு நடந்து கொள்ளும் இவரை விடுதியில் எல்லாருக்கும் அதிகமாகப் பிடிக்கும். ஆனால் சமீபத்தில் யாரோ ஒரு சிலருடன் சேர்ந்து இவர் போதை மருந்துகளுக்கு அடிமையாகிவிட்டார். இவருடைய முகத்தின் களையெல்லாம் போய் விட்டது. பித்துபிடித்தவர்போல் அறைக்குள் உட்கார்ந்துகொள்ளுகிறார். படிப்பிலும் கீழே இறங்கிவிட்டார். பார்த்தால் பாவமாக இருக்கிறது. இவரிடம் எப்படிப் பேச என்று தெரியவில்லை. இவரை எப்படியாவது கிறிஸ்துவிடம் கொண்டுவந்துவிடவேண்டுமென்று ஜெபக்குழுவில் நாங்க ளெல்லாரும் ஜெபித்துவருகிறோம். நீங்கள் இங்கு வந்திருந்த சமயம் இது குறித்து உங்களிடம் கேட்க எப்படியோ தவறிவிட்டோம். இவருக்கு நாங்கள் எப்படி உதவமுடியும் என்று தயவுசெய்து எழுதுங்கள்.*

*அன்பின் வாழ்த்துக்களுடன்,*
*தம்பி பாஸ்கர்.*

**பிரியமுள்ள பாஸ்கருக்கு,**

உங்கள் யாவரையும் அன்று பார்த்து வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி. இவ்விதமே நம் நாட்டின் எல்லாக் கல்லூரிகளிலும் "*இயேசுவுக்கு மாணவர்*" குழுக்கள் உருவாகிவிட்டால் எப்படியிருக்குமென்று திரும்பும்போது கற்பனை செய்துகொண்டு வந்தேன். கடவுள் அதை நிறைவேற்றுவாராக.

ராஜ்குமாரைப் பற்றி அறிந்து மிகவும் வருந்துகிறேன். சாத்தானால் இப்படி வஞ்சிக்கப்பட்ட ஏராளம் வாலிபரை நினைத்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது. அவனை விடுவித்துவிட உங்களுக்கு ஏற்பட்டுள்ள விருப்பத் திற்காய்க் கடவுளைத் துதிக்கிறேன்.

போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டவன் தன் இதயத்தின் ஆழத்தில் தன்னம்பிக்கை இழந்தவனாக இருப்பான். "இனி அவ்வளவுதான், நீ முடிந்து போனாய்" என்று பிசாசு அவனுக்குச் சொல்லி அவனும் அதை அப்படியே நம்பியிருப்பான். எனவே, அவனைத் திருப்பிக்கொண்டுவரவேண்டுமானால், அவனைக் "கண்டனம்" செய்துவிடாமல் அவன்மீது உங்களுக்குக் "கரிசனை" உண்டு என்று கண்டுகொள்ளச் செய்யவேண்டும்.

அடுத்து, இவ்விதப் பழக்கங்களிலிருந்து விடுபட அவனுக்கு உண்மையான விருப்பம் இருக்கவேண்டும். இது மிகவும் அவசியம். சொற்பொழிவு ஆற்றுகிற பாவனையில் அவனிடம் பேசாமல் சாதாரண உரையாடலிலேயே அவனுக்கு இறைவாக்குகளை எடுத்துக்காட்டவேண்டும். எடுத்துக்காட்டாக—

"கடவுள் என் ஆன்மாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார். அவர் என்னைத் தூக்கி நிறுத்துவார்" (சங் 49:15).

"மனிதரால் இது கூடாததுதான்; இறைவனால் எல்லாம் கூடும்" (மத் 19:26).

"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" (பிலி 4:13).

நீதிமான்களுக்கல்ல, பாவிகளுக்காகவே இயேசு வந்தார் என்று தெளிவாகக்கூறி அவன் இயேசுவை இதயத்தில் ஏற்றுக்கொள்ள வழிநடத்து. யோவான் 1:12; 3:16; ரோமர் 8:1,2,16; 6:14,22 போன்ற திருவசனங்களை அவனுக்குக் காட்டி அவனது இதயத்தைத் திடப்படுத்து.

பழைய சகவாசத்திலிராதபடி அவனைப் பிரித்துவிடவேண்டும். உங்க ளுடைய எல்லா ஜெபக் கூடுகைக்கும் அவனை அழைத்துச்செல். அதிகமாக அவனைத் தனியாக இருக்கவிடவேண்டாம்.

பைபிளில் யோவான் நற்செய்தி நூலையும், திருப்பாடல்களையும் அடிக்கடி வாசிக்கச் சொல்லு. அவன் உடனே இயேசுவைப்பற்றிப் பிறருக்கு அறிவிக்க ஊக்குவிக்கப்படுவதும் அவசியம். பரிசுத்த ஆவியின் நிறைவுக்குள் சீக்கிரம் அவனை நடத்திவிடவேண்டும். "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிக்கு" மாற்று மருந்து எப்பொழுதும் "தூயாவியால் நிறைந்திருப்பதே" (எபே 5:18). நாங்கள் இங்கு அவனுக்காக வேண்டிக்கொண்டிருப்போம். உங்கள் முயற்சி வெற்றியடையும்.

அன்புடன் அண்ணன்.



**கடிதம் 6**

# கண்ணை அடக்கமுடியவில்லையே!

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*நீங்கள் வெளியிடும் "ஆசீர்வாதம்" எனும் பத்திரிகையின் இதழ் ஒன்றை என் நண்பன் எனக்குக் கொடுத்தான். அதில் வாலிபருக்குத் தேவையான நல்ல அறிவுரைகளை எழுதியிருந்தீர்கள். வாசகர்கள் தங்கள் இரகசியப் பிரச்னைகளைக்கூட உங்களோடு பகிர்ந்துகொண்டு ஆலோசனை பெறலாம் என்று குறிப்பிட்டிருந்தது எனக்கு உற்சாகமாயிருந்தது. எனது நெடுநாள் பிரச்னை ஒன்றை இக்கடிதத்தில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன். தயவுசெய்து இதை யாருக்கும் காட்டவேண்டாம். உங்கள் ஆலோசனைகளை ஒரு கவரில் எழுதி அனுப்புங்கள். அல்லது □–□□□□இல் பதில் அனுப்புங்கள். எனது □□: <□□□□□@□□□□□□□.□□□>*

*நான் இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் கண்களின் இச்சையிலிருந்து எனக்குக் கொஞ்சங்கூட விடுதலையில்லை. சிந்தனைகளில் தூய்மையாயிருக்க முடியவில்லை. இரவில் சொப்பனங்களெல்லாம் இப்படியே இருக்கின்றன. ஒருவிதக் குற்றவுணர்வு என்னை ஆட்டிப்படைக்கிறது. இதனால் என் படிப்பிலும் போதுமான கவனம் செலுத்த முடியவில்லை.*

*பல ஆன்மீகக் கூட்டங்களில் அடிக்கடி நான் பாவ உணர்வு அடைவதுண்டு. நல்ல தீர்மானங்களெல்லாம் எடுப்பேன். ஆனால் ஒருவாரம்கூடத் தாக்குப்பிடிக்காது. "இது என்னடா கிறிஸ்தவ வாழ்க்கை?" என்றாகிவிட்டது. ஆனால் இயேசுவை நான் நேசிக்கிறேன்; அவரைவிட்டு நான் எங்கே போவேன்? எனது பிரச்னைக்குப் பதில் என்ன என்றுதான் தெரியவில்லை. நான் குறிப்பிட்டுள்ள காரியங்களில் வெற்றியெடுப்பது எங்ஙனம் என்பதை எனக்கு எழுதுங்கள்.*

*நன்றி.*

*அன்புடன்,*
*பரமானந்தம்.*

**அன்புள்ள தம்பி பரமானந்தம்,**

உன் கடிதம் கண்டு உன் நிலைக்காகப் பெரிதும் வருந்துகிறேன். என்னோடு தங்கள் இதயத்தைத் திறக்கும் வாலிபர் பலரின் பிரச்னையும் இதுதான். இதில் நீ சோர்ந்துபோய்விடவேண்டிய அவசியமில்லை. வெற்றிபெற வழியுண்டு. "இயேசுவை நான் நேசிக்கிறேன்" என்று எழுதிருந்தாய். அவர் உன்னைப் போன்ற பருவங்களைக் கடந்துவந்த வாலிபனாகவே இருந்தார். அவரைப்பற்றி நாம் வாசிப்பதென்ன ?

"அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டதினாலே... சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி 2:18).

இயேசுவை இரட்சகராக, ஆண்டவராக அறிந்துகொண்ட நீ இப்போது அவரை "உதவி செய்கிறவராக" ஏற்றுக்கொள் (எபி 4:16). இதுதான் உன் பிரச்னையில் விடுதலை பெற முதற்படி.

அடுத்து, சோதனைக்குரிய காரியங்கள், இடங்கள், நபர்கள் யாவற்றையும் அகற்றிவிடவேண்டும். சோதனைகளுக்கு "எதிர்த்து நில்" எனக் கட்டளை தரும் வேதம் "பாலிய இச்சை" என்ற பாவத்தைக் குறித்துப் பேசும்போதோ, "ஓடிவிடு" என்று வற்புறுத்துகிறது.

"பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு நீ விலகி ஓடு" (2 தீமோ 2:22).
"வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள்" (1 கொரி 6:18).

காரணம் என்ன ? பாலின சோதனைகளைப் பொறுத்த அளவில் ஒருவரும் அவற்றோடு விளையாடி வெற்றிபெறமுடியாது. அது நெருப்பு. இந்தப் பாவத்தைக் குறித்துப் பேசும்போதுதான், "தன் உடை கருகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடுமோ ?" என்றான் சாலமோன் (நீதி 6:25-28). யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்று (ஆதி 39:7-13).

இப்படிச் சொல்வதால் சாலையில் கண்ணை மூடிக்கொண்டு நடக்க வேண்டுமென்று பொருளல்ல. முதல் பார்வையைத் தவிர்க்க இயலாது; அது பாவமுமல்ல. ஆனால் இரண்டாம் பார்வையைத் தவிர்த்திடு; அதில்தான் பாவம் உண்டாகிறது. Avoid the second look!

எக்காரணத்தையிட்டும் சும்மா சோம்பேறியாயிராதே. சோம்பேறியின் மனது பிசாசின் தொழிற்கூடம். அதிகமாக வேதம் வாசித்து இதயத்தைத் திரு வசனங்களால் நிரப்பு. "நீ நடக்கும்போது அது உனக்கு வழிகாட்டும்; நீ படும்கும்போது அது உன்னோடு உரையாடும்" (நீதி 6:21-23). என்னே ஆசீர்வாதம் !

அடுத்தமுறை பிசாசு உன்னைச் சோதிக்கும்போது, "என் பழைய மனிதன் செத்துவிட்டான்; இப்பொழுது நான் கடவுளுக்கென்று உயிர்வாழ்கிறேன்" என்று வாய்திறந்து சொல். அவர் கிருபை உனக்குப் போதும். பாவம் உன்னை மேற்கொள்ளாது. ஜெயம் உனது !

உனக்காக ஜெபிக்கும்,
அண்ணன்.



**கடிதம் 7**

# காதலித்தால் என்ன?

*அன்புள்ள அங்கிள்,*

*ரவீந்திரன் வரையும் மடல்.*

*சென்ற சனிக்கிழமை மதியம் எங்கள் ஹாஸ்டலில் நீங்கள் பேசி முடித்தபிறகு ஏதாவது கேள்விகளிருந்தால் கேளுங்கள் என்று சொன்னீர்கள். பலரும் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் நான் எதிர்பார்த்த கேள்விகளை யாருமே கேட்கவில்லை. கேட்பதற்குக் கூச்சம்போலும்! நானும் கேட்காதது அதினாலேயே. அன்று உங்களிடம் நான் கேட்கத் தயங்கிய கேள்விகளை இங்கு எழுதியுள்ளேன். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.*

1. *காதலிப்பது தவறா?*
2. *பிரியப்பட்ட பெண்ணைத் திருமணத்திற்குமுன் தொட்டுப் பழகுவது பாவமா?*

*இக்கடிதத்தைக் கிழித்துப்போட்டுவிடுங்கள். அங்கு யாராவது பார்த்தால் என்னைப்பற்றித் தவறாக எண்ணிவிடப்போகிறார்கள்! நீங்கள் பதில் எழுதும்போதும் □□□□□□□□□ என்று கவரில் குறிப்பிட்டு அனுப்புங்கள். உங்களுக்கு என் நன்றி.*

*இப்படிக்கு,*
*ரவீந்திரன்.*

**அன்புள்ள ரவீ,**

உன்னுடைய தமாஷான கடிதம் கிடைத்தது. வாலிபர் தங்கள் பிரச்னைகளை மூடி மறைத்து வேதனைப்படுவதைவிட இப்படிப் பகிர்ந்துகொள்வதையே நான் பாராட்டுகிறேன். நீ கேட்டுக்கொண்டபடியே நீ எழுதியதை யாருக்கும் சொல்லமாட்டேன். உன் கேள்விகளுக்குச் சுருக்கமாக இங்கு பதில் தருகிறேன்.

**1.** வாலிபன் ஒருவன் நங்கை ஒருத்தியை விரும்புவது இயல்பு. எதிர்த்துருவங்கள் ஒன்றையொன்று ஈர்க்கத்தான் செய்யும். ஆனால் இங்கு நினைவிற்கொள்ளவேண்டிய எச்சரிப்புகள் உண்டு. காதலுக்குக் கண்ணில்லை என்பது பெரிதும் உண்மை. பார்த்தவுடன் ஒருவித உணர்ச்சிக்கு அடிமையாகி சற்றும் நிதானிக்காமல் இங்கு பலியானோர் ஏராளம். ஒழுங்காகக் கல்லூரிக்குப் போய்ப் படித்துவந்தாலே நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறுவது பெரும்பாலான மாணவர்க்குக் கடினம். வெறுமனே பாஸ்பண்ணியெல்லாம் இந்தக் காலம் ஒரு வேலையும் கிடைக்காது. அவ்வளவு போட்டி. மாணவப் பருவத்திலிருக்கும் வாலிபன் "காதலிக்க நேரமில்லை" என்று சொல்லிப் பிழைத்துக் கொண்டால் அவன் கெட்டிக்காரன். படித்து முடித்து நல்லதொரு வேலையில் அமர்ந்தபின் உனது பெற்றோரிடமும் உனக்குத் தெரிந்த பெரியோரிடமும் கூறி அவர்களது உதவியுடன் ஒரு பெண்ணைத் தேடு. இப்பொழுதிருந்தே உனது எதிர்காலத்திற்காய்ப் பிரார்த்திக்கத் துவங்கு.

**2.** ஒருவருக்கொருவர் விரும்பியும்கூட ஏதோ காரணங்களால் திருமணம் சாத்தியமில்லாமல் போவது உண்டு. அப்படியானால் தொட்டுப் பழகுவது எவ்வளவு சேதத்தை விளைவிக்கும்! விளையாட்டுக்குத் தொடுவது ஒருபோதும் அங்கே நிற்காது. அது வினையில்தான் முடியும். நாமெல்லாம் என்ன angels என்று நினைப்பா? அப்படியே விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்வது நிச்சயமென்று ஆகிவிட்டாலும், Why not reserve the thrill for the marriage bed? ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கக் கூடாதா? ஏற்கனவே ஒருவர் உடலை ஒருவருக்குக் கொடுத்துவிட்டால், திருமணத்தன்று "பரிசுத்த" விவாக ஆராதனையில் ஆயர் வாசிப்பதெல்லாம் மணமக்களைப் பொறுத்தவரை கடவுளுக்கும் சபையாருக்கும் முன்பாக மாய்மாலந்தானே? So, please wait!

மேலைநாட்டுக் கலாச்சாரம் இன்று அவர்களைச் சின்னாபின்னமாக்கி விட்டதென்று தெரியுமல்லவா? விடுதலை அல்லது சுயாதீனத்தின் அடுத்த வரம்புவரை போகாமலிருப்பது எப்பொழுதும் நன்று.

உனது எதிர்காலத்தைக் குறித்து ஒன்று சொல்லுகிறேன்: "உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார்" (சங் 37:5).

அன்புடன்,
ஸ்டான்லி



**கடிதம் 8**

# சுயபுணர்ச்சியை விடுவதெப்படி?

*பிரியமுள்ள அண்ணனுக்கு,*

*எங்கள் ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை முடிந்ததும் வாலிபர் கூட்டம் நடக்கும். போன வாரத்துக்கு முந்திய வாரம் நான் என் சாட்சியை அங்கு கூறினேன். எங்கள் ஆயருக்கும் வாலிபர் குழுத் தலைவருக்கும் அது மிகவும் பிரியமாயிருந்தது. எனவே போன வாரம் மறுபடியும் என்னைப் பேசச் சொன்னார்கள். நான் கலாத்தியர் 5:19-21; 1 கொரி 6:9,10 ஆகிய இரு பகுதிகளையும் எடுத்து அதில் சொல்லப்பட்டுள்ள பாவங்களிலிருந்தெல்லாம் நாம் விடுதலை பெறாவிட்டால் இறையரசிற்குள் நுழைய முடியாது என்று விளக்கிச் சொன்னேன். பலருடைய கண்கள் கலங்கியதையும், அவர்கள் அன்று மனந்திரும்பித் தங்களைக் கிறிஸ்துவிடம் ஒப்புவித்ததையும் கண்டேன். ஆண்டவரைத் துதித்துக்கொண்டே ஆலயத்திற்கு வெளியே வரும்போது ஒரு வாலிபன் என்னைப் பிடித்துக்கொண்டு தனியாக தன்னோடு பேச அழைத்தான். அவனது இதயம் நொறுங்கியிருந்தது. அவன் பதறிய உதடுகளுடன் சுயபுணர்ச்சி, ஆண்புணர்ச்சி ஆகிய பழக்கங்களில் தான் வெகுவாய்ச் சிக்கியிருப்பதாகவும், எப்படி அவற்றிலிருந்து விடுபடுவதென்று தெரியாமல் திகைப்பதாகவும் கூறினான். இது தவிர்த்து இரவில் தூக்கத்தில் படுக்கையிலேயே அடிக்கடி இந்திரியம் கழிந்து விடுகிறது என்றும், தனது மனத்திறன், உடல் பலம் யாவும் அழிந்துகொண்டிருக்கிறதென்றும் சொல்லிப் புலம்பினான். "இயேசு உன்னை விடுவிப்பார்" என்று சொல்லி ஜெபித்து, "மறுபடியும் உன்னைச் சந்திப்பேன்" என்று சொல்லி அனுப்பினேன். இது தவிர்த்து அவனுக்கு நடைமுறை ஆலோசனைகள் எதுவும் என்னால் தரமுடியவில்லை. இந்த வாரயிறுதிக்குள் அவனை மறுபடி சந்திப்பேன். அவன் திரும்ப அந்தப் பாவங்களுக்குள் விழாதிருக்க அவனுக்குத் தேவையான ஆலோசனைகளை எனக்கு எழுதி அனுப்புங்கள். அவனுக்காக வேண்டுங்கள். அவன் பெயரை எழுத விரும்பவில்லை.*

*இப்படிக்கு,*
*தம்பி ஜெயசீலன்.*

**அன்புள்ள தம்பி,**

உனது கடிதம் கிடைத்தது. இறைவன் உன்னைப் பயன்படுத்தத் துவங்கியிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர் இன்னும் உன்னை அநேகருக்கு—குறிப்பாக வாலிபருக்கு—ஆசீர்வாதமாகப் பயன் படுத்துவார். எங்கள் ஜெபம் எப்பொழுதும் உனக்குண்டு. உன்னை அன்று சந்தித்த வாலிப நண்பனின் பிரச்னைகளுக்குச் சில ஆலோசனைகளைத் தருகிறேன். பாவப்பிடியில் வாடித்தவிக்கும் இளைஞர் நடுவில் நேர்த்தியாய்ப் பணியாற்றும் டேவிட் வில்கர்சன் என்ற தேவ மனிதனின் புத்தகம் ஒன்றிலிருந்து இக்குறிப்புகளை எடுத்துள்ளேன்.

❒ *சுயபுணர்ச்சியிலிருந்து விடுதலைபெற வழி—*

1. சுயபுணர்ச்சி என்பது தேவையற்ற, அவசியமில்லாத, சுகக் கேடான பழக்கம் என அறியவேண்டும்.
2. பழைய வாழ்க்கையை மறந்து, இனி அவ்விதம் இருக்கத் தேவை யில்லை என்று உணர்ந்து, தன்னையே நொந்துகொள்ளாமல், நம்பிக்கை யுடன் மேல்நோக்கிப் பார்க்கவேண்டும். இயேசு விடுவிக்கிறார்!
3. இச்சைகளைக் கிளறிவிடும் படங்கள், புத்தகங்கள், பாடல்கள், நட்புகள் யாவற்றையும் அகற்றவேண்டும். தனித்துச் சோம்பலாய் ஒருபோதும் உட்கார்ந்திருக்கக்கூடாது. சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.

❒ *ஆண்புணர்ச்சியிலிருந்து விடுதலை பெற வழி—*

1. எனது பாவத்திற்குப் பிறர்மீது பழி சுமத்தக்கூடாது.
2. முடியாது முடியாது என்று சொல்லுவதை நிறுத்தி கடவுளால் என்னை மாற்றமுடியும் என்று சொல்லவேண்டும்.
3. என் பாவத்தை வெறுத்துவிடவேண்டும்; ஆண்டவரை ஓர் அற்புதம் செய்யக் கேட்கவேண்டும்.
4. என் பழைய தோழர்களை விட்டுவிடவேண்டும்; இயேசுவின் மார்பில் சாய்ந்துகொள்ளவேண்டும்.
5. திருவசனத்தால் மனதை நிரப்பவேண்டும்.

நாளையைக் குறித்து இன்று கவலைப்படத் தேவையில்லை. இன்று காத்தவர் நாளையும் காப்பார். இப்பாவத்திற்கு விரோதமாக எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் விண்ணகத்திலிருந்து ஆண்டவர் பார்த்துக்கொண் டிருக்கிறார்; தனியே எவரையும் யுத்தத்தில் விட்டுவிடமாட்டார்.

❒ *தூக்கத்தில் இந்திரியம் கழிதலைப்பற்றி—*

வாரத்திற்கொருமுறை அல்லது சில சமயங்களில் இருமுறைகூட தானாகத் தூக்கத்தில் இந்திரியம் வெளிப்படுவது உடலமைப்பின் இயற்கை அம்சமாகும். இது பொதுவாக ஒரு கனவைத் தொடர்ந்து நிகழலாம். வயது வரும் இளைஞர் இதைக் குறித்த சரியான அறிவின்மையால் குற்றவுணர்வு அடைவதுண்டு.

சகரியா பூணன் என்ற திருத்தொண்டர் எழுதியுள்ள *"பாலுறவும் திரு மணமும்"* என்ற புத்தகத்தை வாலிபர்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டும். ஒரு பிரதியை நீயும் வாங்கி வாசி, உன் நண்பனுக்கும் கொடு.

அன்புள்ள அண்ணன்.



**கடிதம் 9**

# வீட்டில் எதிர்ப்பு!

*மதிப்புக்குரிய திருத்தொண்டர்க்கு,*

*அரியலூர் உயர்நிலைப்பள்ளில் இறுதியாண்டு படிக்கும் பழனிச்சாமி வணக்கத்துடன் எழுதிக்கொண்டது...*

*ஐயா, நான் பரம்பரை வைதீக இந்துக் குடும்பத்தில் பிறந்தவன். இந்து மார்க்கத்தில் அதிகப் பற்றுள்ளவனுங்கூட. எங்கள் பள்ளியிலுள்ள சில கிறிஸ்தவ மாணவர் எனக்கு நெருங்கிய நண்பர். நாளடைவில் என் னுள்ளத்தில் இராத ஒரு மகிழ்ச்சியும் சமாதானமும் அவர்களிலிருக்கக் கண்டேன். அவர்கள் எனக்கு யோவான் சுவிசேஷம் என்ற புத்தக மொன்றைக் கொடுத்தார்கள். அதை வாசிக்க வாசிக்க என் கண்கள் தெளிவடைந்ததாக உணர்ந்தேன். இவ்வுலகில் பாவமேயில்லாது வாழ்ந்து பாவிகளுக்காகப் பலியானது இயேசு ஒருவரே என்று அறிந்தேன். கடந்த ஆண்டு தஞ்சாவூரில் நீங்கள் நடத்திய மாணவர் மலர்ச்சி முகாமுக்கு என் நண்பர்கள் என்னை அழைத்து வந்தார்கள். அம்முகாமில் இறைவனின் பிரசன்னம் என்னை ஆட்கொண்டது. இயேசு நாதருக்கு அன்றே என்னை அர்ப்பணித்தேன். வாழ்க்கையே மாறிவிட்டது. நான் இரகசியமாக ஈடுபட்டிருந்த பாவங்களிலெல்லாம் வெற்றி கிடைத்தது.*

*விடுமுறைக்கு வீட்டிற்குச் சென்றிருந்தபோது என் பெற்றோரிடமும் உடன் பிறந்தோரிடமும் எனது புதிய அனுபவத்தைப்பற்றிச் சொன்னேன். முதலில் நன்றாகக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் சற்று நேரத்தில் என்னைப் பலவாறு திட்டி, இனி பைபிள் படித்தால் வீட்டை விட்டே விரட்டிவிடுவோம் என்று மிரட்டினார்கள். நான் அமைதியாக இருந்து விட்டு விடுதிக்கு வந்துவிட்டேன். இப்போது □□□□□□□க்கு வீட்டுக்குப் போகும்போதெல்லாம் ஒரே போராட்டம். என் மேலுள்ள கோபத்தை வீட்டிலுள்ள மற்றவர்களிடம் என் அப்பா காட்டுகிறார்.*

*நான் இயேசுவை அவ்வளவாக நேசித்துவிட்டேன். இனி என்னால் அவரை விடமுடியாது. ஆனால் இப்பது வாழ்வில் எப்படி நிலைத்திருப்பது என்று தெரியவில்லை. நாளுக்கு நாள் பிரச்னை கூடுகிறதேயொழிய குறைந்தபாடில்லை.*

*எனக்காக தயவுசெய்து இறைவனிடம் பிரார்த்தியுங்கள். பதில் எழுதுங்கள். உங்கள் பணியை இறைவன் மென்மேலும் பெருகச் செய்ய வேண்டுகிறேன்.*

*தங்கள் அன்புள்ள,*
*பழனிச்சாமி.*

அன்புள்ள பழனிச்சாமிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நீ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் உன் வீட்டிலிருந்து உனக்கு வரும் எதிர்ப்பைக் குறித்து எழுதியிருந்தாய். இவ்வளவு பிரச்னையில் இயேசுவோடு எப்படி நிலைத்திருப்பது எனக் கேட்டிருந்தாய்.

இயேசு சொல்வது: "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்'' (யோ 15:16). "நான் என் ஆடுகளுக்கு நிலைவாழ்வைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் அழியா. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை'' (யோ 10:28)

பரம்பரை யூத மார்க்கத்தில் வெறிகொண்டு கிறிஸ்தவத்துக்கு விரோத மாகச் சீறிக்கொண்டிருந்த பவுல் என்பவனைக் கிறிஸ்து சந்தித்தபோது அவனைப்பற்றி இப்படிச் சொன்னார்: "அவன் நான் தெரிந்துகொண்ட கருவி. எனக்காக அவன் எவ்வளவு பாடுபடவேண்டுமென்று நான் அவனுக்குக் காண்பிப்பேன்'' (அப் 9:16). தம்பி, நீயும் கிறிஸ்துவிடம் விசுவாசமாயிருக்க மட்டுமல்ல, அவருக்காகப் பாடுபடவும் அழைக்கப்பட்டுள்ளாய்! எனவே மருண்டுவிடாதே! (பிலி 1:28-30).

இயேசு சமாதானப் பிரபுவாக இவ்வுலகத்திற்கு வந்தார். ஆனால் சத்தி யத்தைப் பொறுத்தவரை அவரை ஏற்றுக்கொண்டோருக்கும் ஏற்றுக்கொள்ளா தோருக்குமிடையே பிரிவினை வரத்தான் செய்யும். இதைக் குறித்துப் பேசும்போது இயேசு இப்படிச் சொன்னார்: "ஒரு மனிதனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தந்தையையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குத் தகுதியற்றவன்.'' இதன் பொருள், நீ உன் பெற் றோரைப் பகைக்கவேண்டும் என்பதல்ல. அவர்கள் மீதுள்ள உன் பாசமும், கண்ணியமும் உனக்குப் பெருகட்டும்; ஆனால் திருச்சத்தியத்தை நீ விட்டுக் கொடுக்கக்கூடாது.

உன் பெற்றோர், உடன் பிறந்தோரின் ஆன்மீக இரட்சிப்புக்காய்க் கடவுளிடம் பிரார்த்தனைசெய். "இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' என்ற தேவ வாக்கு உனக்குண்டு (அப் 16:31). கடவுளால் கூடாதது ஒன்றுமில்லையே.

கிறிஸ்துவின்மேல் பற்றுள்ளோரின் சகவாசம் உனக்கு மிகவும் அவசியம். உங்கள் பள்ளி ஜெபக்குழுவில் தவறாது கலந்துகொள். அரியலூரிலுள்ள நல்ல கிறிஸ்தவ சபை ஒன்றில் சேர்ந்துகொண்டு தேவாராதனைகளிலும் திருப்பணிகளிலும் பங்கெடு. திருமறையை நிறைய வாசி. நீ நாளுக்கு நாள் நன்கு பலப்பட்டு சோதனைகளையும், பிரச்னைகளையும் மேற்கொள்ளுவாய். "உனது விசுவாசமே உலகை வெல்லும் வெற்றி!'' (1 யோ 5:4).

அடிக்கடி கடிதம் எழுது.

உனக்காக ஜெபிக்கும்,
சகோதரன்.



**கடிதம் 10**

# நண்பரை விடவேண்டுமோ?

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*பைபிளை ஓராண்டில் வாசித்து முடிக்க உதவியாக வேத வாசிப்பு அட்டவணை ஒன்றை எனக்கு அனுப்பித் தந்ததற்காக நன்றி. காலை யும் மாலையும் அந்த அட்டவணையின்படியே வேதப் பகுதிகளை வாசித்து வருகிறேன். நன்றாக இருக்கிறது. நேற்று காலையில் 2 கொரிந்தியர் 6ஆம் அத்தியாயம் வாசித்தேன். அதிலுள்ள கடைசி 5 வசனங்கள் என் கவனத்தைக் கவர்ந்தன. பலமுறை திரும்பத் திரும்ப வாசித்தேன். அவிசுவாசி களோடு ஐக்கியம் கூடாது என்பது புரிகிறது. ஆனால் நடைமுறையில் அதைக் குறித்து சில கேள்விகள் என் மனதில் எழுகின்றன. அதை இங்கு எழுதுகிறேன். பதில் எழுதினால் நன்றியுள்ளவனாயிருப்பேன்.*

*1. இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத எவரும் எனக்கு நண்பராயிருக்க முடியாதா?*

*2. விக்கிரகப் படங்கள் வைத்திருக்கும் மாணவரின் அறைக்குள் செல்லக்கூடாதா?*

*3. □□□□□□□ □□□□இல் ஆபாசமான பாடல்களும், பத்திரிகைகளும் உண்டு. அங்கே நான் □□□□□□□□□□ படிக்கக்கூட செல்லக்கூடாதா?*

*4. எங்கள் வீட்டில் நான் மட்டும்தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். அம்மா, அப்பா, அண்ணன், அக்கா யாவரும் ஆலயத்திற்கு ஒழுங்காகப் போவார்கள்; ஆனால் இன்னும் அவர்கள் மறுபடி பிறக்கவில்லை. அப்படியானால் விடுமுறைக்கு நான் வீட்டிற்குச் செல்வது தவறா?*

*உங்கள் விளக்கமான பதிலை ஆவலோடு எதிர்நோக்குகிறேன்.*

*கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துக்கள்.*

*இங்ஙனம்,*
*ஜெபராஜ்.*

**தம்பி ஜெபராஜுக்கு,**

அவிசுவாசிகளின் ஐக்கியம் கூடாது என்று வாசித்ததும் உன் மனதில் எழுந்துள்ள கேள்விகளுக்காக உன்னைப் பெரிதும் மெச்சிக்கொள்ளுகிறேன். இதுதான் பைபிளைப் படிக்கும் சரியான முறையாகும். வெறுமனே ஏட்டுச் சுரைக்காயாக வேதம் போய்விடக்கூடாது. வேதம் தரும் கட்டளைகளை நடைமுறையில் அப்பியாசிப்பது எங்ஙனம் எனக் கண்டுகொள்வதே காரியம். இதோ உன் கேள்விகளுக்குப் பதில்–

**1.** நட்பு (friendship) வேறு; ஐக்கியம் அல்லது பிணைப்பு (fellowship) வேறு. பாவிகளோடு இயேசு நட்பு கொண்டிருந்ததாலேயே அவரைப் "பாவிகளுக்கு சிநேகிதன்" என்று அழைத்தனர் (மத் 11:19). அதே வேளையில் அவர் பாவச் செயலுக்கு உடன்படாமல் தன்னைத் தூய்மையாய்க் காத்துக் கொண்டதால் "பாவிகளுக்கு விலகினவர்" என்றும் வாசிக்கிறோம் (எபி 7:26). "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருக்கிறவன் பேறுபெற்றவன்" என்பதை மறவாதே (சங் 1:1).

**2.** இந்தக் கேள்விக்குப் பவுலடியாரையே விடைதரக் கேட்போம். "விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று கடிதத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், ... விக்கிர காராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டே ஓடிப்போக வேண்டியதாயிருக்குமே" (1 கொரி 5:9,10).

**3.** Common Roomக்குள் போவது உனது ஆன்மீக வாழ்வுக்குப் பாதகமாயிருந்தால் அங்கு போகாமலிருப்பது உத்தமம். முடிந்தால் இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து ஒரு newspaper தருவித்து வாசித்துக்கொள்ளுங்கள். இல்லையேல் அதிக இரைச்சல் இல்லாத வேளையில் Common Roomக்குப் போய் கொஞ்சநேரம் வாசித்துவிட்டு வரலாம். நலமானதைத் தெரிந்துகொள்.

**4.** விசுவாசி ஒரு அவிசுவாசியை மணக்க ஒருபோதும் வேதம் அனுமதிப் பதில்லை. ஆனால் ஏற்கனவே மணமானவர்களுக்கு ஆலோசனை தரும்போது, மனைவி, கணவன் இருவரில் யாராவது ஒருவர் அவிசுவாசியாயிருந்தால் அதைக் காரணமாகக்கொண்டு தள்ளிவிடக்கூடாது என்று பவுலடியார் எழுதியுள்ளார் (1 கொரி 7:12,13). இந்த ரீதியில் பார்க்கும்போது, உன் வீட்டிலுள்ளோர் மீது உன் பொறுப்பும் பாசமும் சற்றும் தணியக்கூடாது என்பது தெளிவாகிறதல்லவா ? அவர்களை இரட்சிப்பிற்குள் கொண்டுவரவேண்டியது உனது பொறுப்பு. அப்போஸ்தலர் 16:31இலுள்ள திருவாக்கை நம்பு.

இயேசு போல் வாழ்ந்திடு. அவர் பாவிகளின் நேசர், ஆனால் பாவ நாசர்!

அன்புள்ள,
அண்ணன்.



**கடிதம் 11**

# படிக்க முடியவில்லையே!

*அன்புள்ள சகோதரனுக்கு,*

*அடுத்த மாதம் 15 அன்று எங்கள் இறுதித் தேர்வு துவங்குகிறது. கல்லூரியில் எனக்கு இது இறுதியாண்டு. தேர்வுக்காகப் படிக்க வேண்டிய பாடங்கள் ஏராளம். ஆனால் சில மாதங்களாக என்னால் □□□□□□□□□□□ பண்ணிப் படிக்கவே முடியவில்லை. மனனம் செய்வதென்றால் அவ்வளவு கடினமாயிருக்கிறது. ஞாபகசக்தியே இல்லை. புத்தகத்தைத் திறந்ததும் கண்கள்தான் பக்கங்கள்மேல் இருக்கின்றனவே தவிர சிந்தனை எங்கெங்கோ போய்விடுகிறது. தேர்வைக்குறித்த அச்சம் ஏற்கனவே என்னைப் பிடித்துவிட்டது. நாங்கள் மிகவும் எளிய குடும்பம். கடனெடுத்துத்தான் என் பெற்றோர் என்னைப் படிக்கவைக்கிறார்கள். அண்ணா, நீங்கள் எனக்காக ஜெபம்பண்ணுங்கள். சகோதரன் தினகரனுக்கும் எழுதியிருக்கிறேன். ஏதாவது ஆலோசனையிருந்தாலும் எழுதுங்கள். இன்னும் ஒரு மாதத்தில் பரீட்சை எழுதவேண்டுமென்று நினைத்தாலே பயமாயிருக்கிறது. மற்ற சகோதரர்களிடமும் சொல்லி எனக்காக ஜெபிக்கச் சொல்லுங்கள்.*

*உங்களுக்கு என் அன்பு கலந்த வாழ்த்துக்கள்.*

*உங்கள் உதவி நாடும்,*
*மனோகர்.*

அன்புள்ள மனோகருக்கு,

உன் கடிதம் கிடைத்தது. ஏன் இப்படி தைரியத்தை இழந்துவிட்டாய்? பயப்படாதே. திடமனதாயிரு. இறைவன் உனக்குக் கொடுத்திருப்பது பயமுள்ள ஆவியல்ல, தெளிந்த புத்தியுள்ள ஆவிதானே (2 தீமோ 1:7). பயமானது படிப்புக்கு ஓர் எதிரி. ஐயோ fail ஆகிவிடுவேனா, fail ஆகிவிடுவேனோ என்று எதிர்மறையாகவே நீ சிந்தித்துக் கொண்டிருந்தால் அதுவே உனக்குக் கேடாகிவிடும். "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது. எனக்குச் சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைத லுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது" என்றான் பழம் பக்தன் யோபு (யோபு 3:25,26). எனவே, "மிகுந்த பலனுக்கேதுவான உனது தைரியத்தை விட்டுவிடாதே" (எபி 10:35).

பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது என எழுதியிருந்தாய். முதலாவது, என்னென்ன பாடங்களை எத்தனை நாளுக்குள் படித்து எப்பொழுது முடிக்கவேண்டுமென்று திட்டமிடு. ஒரே பாடத்தில் அளவுக்கு மீறி நேரத்தைச் செலவிட்டுவிடாதே. ஒவ்வொரு பாடத்தையும் துவங்குமுன், "ஆண்டவரே, இப்பாடம் எனக்கு நன்கு புரியவும், மனதில் பதியவும், குறித்த காலத்தில் முடிக்கப்படவும் எனக்குக் கிருபையருளும்" என்று வேண்டிடு. நீ உரிமை பாராட்டவேண்டிய முக்கியமான தேவவாக்கு ஒன்றைத் தருகிறேன்–

"ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய இறைவனிடத்தில் கேட்கட்டும், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக் 1:5).

கடவுளிடத்தில் கேட்கும்போதே உனக்கு ஞானம் கிடைக்கிறது என்று நம்பித் தைரியங்கொள்.

ஒவ்வொரு பாடப்புத்தகம் படிக்கும்போதும் குறிப்பேடு ஒன்றில் அந்தந்த அத்தியாயங்களின் சாராம்சத்தையும் முக்கியக் குறிப்புகளையும் எழுதி வைத்துக்கொள். பரீட்சைக்கு முந்திய நாள் இதுதான் உனக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

அதிகாலை நேரத்தில் உனது தனித் தியானம் முடிந்ததும், மனனம் பண்ணுவது எளிது. மாலையில் கொஞ்சநேரம் freeஆக ஒரு walking அல்லது bycycling போய் வருவது உன் மனதை freshஆக வைத்துக்கொள்ளும்.

முழு முயற்சியுடன் ஆயத்தம் செய்துவிட்டுப் பரீட்சைக்குப் போ. மீதியை இறைவனது கையில் விட்டுவிடு. வெற்றி அவரால் வரும். "என் மக்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை" என்கிறார் அவர் (யோவேல் 2:27).

எங்கள் ஜெபம் உனக்குண்டு.

உன் அன்புள்ள,
சகோதரன்.

*(பக்கம் 54இல் தேர்வுக்கான பிரார்த்தனை ஒன்றுண்டு.)*



**கடிதம் 12**

# உடல் பலக்குறைவு!

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*எனது உடல்நலத்துக்காக இறைவேண்டும்படி இக்கடிதத்தை உங்க ளுக்கு எழுதுகிறேன். இயேசுவுக்காக எதையெல்லாமோ சாதிக்க வேண்டு மென்று விருப்பமுண்டு. ஆனால் பலமில்லை. அதிகாலையில் எழுந்து ஜெபிக்க நினைத்தால் உடல் அதற்கு மறுப்புச் சொல்கிறது. நாள் முழுவதும் அவ்வளவு சுறுசுறுப்பா யிருக்க முடியவில்லை. ஒருவேளைகூட உபவாசித்து ஜெபிக்க முடிவதில்லை. அடிக்கடி படுத்துத் தூங்கவேண்டும் போலிருக் கிறது. இரவில் 9 அல்லது 10 மணிக்கு மேல் படித்து முடித்த பின்பு அரை மணி நேரமாவது பைபிள் வாசிக்க நினைத்தால் வேதம் திறந்திருக் கிறது, ஆனால் கண்கள் மூடிவிடுகின்றன. உடன் கிறிஸ்தவ மாணவர்கள் ஞாயிறு மாலையில் நற்செய்திப்பணிக்கு நடந்தோ, சைக்கிளிலோ செல்லும்போது அவர்களோடு என்னால் உற்சாகமாய்ப் போகமுடிவதில்லை..*

*எனக்காக ஜெபியுங்கள். நன்றி.*

*இப்படிக்கு,*
*உங்கள் அன்புள்ள தம்பி,*
*சுந்தரமூர்த்தி.*

**அன்புள்ள தம்பி,**

உன் கடிதத்திற்குப் பதில் எழுதும்படி அண்ணன் என்னிடம் கொடுத்தார்கள். உனக்காக ஜெபிக்கிறோம்.

உடலை எவ்வளவு கவனியாது விடுகிறோமோ அவ்வளவு நாம் ஆன்மீகச் சிந்தனையில் வளருவோம் என்று சிலரிடம் நிலவிவரும் கருத்து தவறானது. இயேசுவானவர் உடலுக்கடுத்தவைகளிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தாராம் (லூக் 2:5). எனவேதான் 3½ ஆண்டுகளுக்குள் அவ்வளவு சுறு சுறுப்பாய் அவர் தம் வேலையை முடித்துவிட முடிந்தது.

அதிகாலையிலெழும்பும் பழக்கம் உசிதமானது. எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துவிட்டு, நன்கு பல் துலக்கி, குளிர்ந்த நீரில் முகம் கழுவி, தலையையும் வாரி, பின்பு தியானத்திற்கு உட்கார்ந்து பார். தூங்கி விழமாட்டாய்!

பரிமாறப்படும் உணவு வகைகளை முழுமையாகச் சாப்பிடு. ருசியில்லை என்று எதையும்–குறிப்பாகக் கீரை, காய்கறி, பருப்பு வகைகளை—தள்ளாதே. உடலின் உற்சாகத்துக்கான தூண்டுவிசையாகிய வைட்டமின் சத்துக்கள் இவற்றிலும் பழங்களிலும்தான் உண்டு. குளிர்ச்சி, சூடு என்று உணவு வகைகளில் பேதம் வேண்டாம். இடைவேளைகளில் வாய்ப்பசிக்காக இனிப்பு, காரம், பிஸ்கட், காபி, டீ, முதலியன சாப்பிடுவது வயிற்றிற்கு ஆரோக்கியமல்ல. Aerated drinksஐ விட நிறைய தண்ணீர் குடி. வாலிபர் பலர் இலகுவான இவ்வழிகளை விட்டு ஹார்லிக்ஸ், பூஸ்ட், டானிக் என்று வீணாகத்தான் செலவு செய்கிறார்கள்.

உழைப்பு உடலுக்கு உந்துவிசை தரும். தண்ணீர் இறைப்பது, தோட்டவேலை, சைக்கிள் ஓட்டுவது, விரைவாய் நடப்பது முதலியன நல்ல உடற்பயிற்சிகளாகும். தம் தந்தையோடு கடினமான தச்சுவேலையில் பயிற்சி பெற்றது இயேசுவுக்கு அவரது பிற்காலத் திருப்பணிக்கு எவ்வளவு பயனுள்ளதாயிருந்திருக்கும். மாற்கு 6:3; மத்தேயு 8:20 ஆகிய திருவசனங்களை வாசித்துப்பார். சுவர் இருந்தால்தான் சித்திரம்!

உனக்குச் சாதாரணமாக 6 மணிநேரத் தூக்கம் போதுமானது. இது பழக்கத்தில்தான் வரும். ஜன்னல்களைத் திறந்து வைத்து fanஐ விட இயற்கைக் காற்றில் தூங்கிப் பழகு.

சுத்தமான ஆடைகளை அணிவதும், குறிப்பாக உள்ளுடைகளைத் தினமும் துவைத்துப் பயன்படுத்துவதும், உனது மனநிலைக்கும் ஆள்தத்துவத்திற்கும் புத்துணர்வு அளிக்கும். இரவிலொருமுறை பல் துலக்குவது மிக்க நன்று. சுத்தம் சுகம் தரும்.

எதையுமே "என்னால் முடியாது, எனக்கு பலமில்லை" என்று ஒதுக்குவதை நிறுத்தி, "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" என அறிக்கையிட்டு முன்செல் (பிலி 4:13).

இப்படிக்கு,
உன் அக்கா.

---

இக்கடிதத்தை எழுதியது ஆசிரியரின் மனைவி Dr. லில்லியன் ஸ்டான்லி, M.B.B.S., D.C.H. அவர்கள். "*வயது பதினாறிருக்கும்*" என்று நங்கையருக்கும், "*வாலிப உலகம்*" என்று வாலிபர் நங்கையருக்கும் இவர்கள் எழுதியுள்ள நூல்களை வாங்கி வாசியுங்கள்.



**கடிதம் 13**

# பைபிள் படிப்பது எப்படி?

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.*

*நீங்கள் எங்கள் ஊரிலுள்ள சபையில் மூன்று நாள் கூட்டம் நடத்திய போது ஒரு நாள் மதியம் வாலிபருக்கென சிறப்பு அருளுரை ஒன்று கொடுத்தீர்கள். அதில் "வாலிபர், குறிப்பாக மாணவர், திருமறையை அதிகமாய் விரும்பி வாசிக்கவேண்டும்; வாலிபர் தங்களைச் சுத்தமாகக் காத்துக்கொள்ள அது ஒன்றுதான் வழி" என்று சொன்னீர்கள். இனி ஒழுங்காக பைபிள் வாசிக்கவேண்டுமென்று அப்பொழுதே நான் தீர்மானித்துக்கொண்டேன். ஆனால் வேதத்தைப் படிக்க எது சிறந்த முறை, எப்படி அதைப் படிக்கவேண்டும் என்றெல்லாம் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இதற்கு நீங்கள் வழிகாட்ட வேண்டும். உங்கள் பதிலை ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிறேன்.*

*உங்கள் அன்புள்ள,*
*சேகர்.*

**அன்புள்ள சேகருக்கு,**

திருமறையை வாசிக்கவேண்டிய வழிமுறைகளைப்பற்றிக் கேட்டெழுதியிருந்த உன் கடிதம் கிடைத்தது. வேதத்தின் மேல் உனக்கு ஏற்பட்டுள்ள விருப்பத்திற்காகப் பெருமகிழ்ச்சியடைகிறேன். "உமது வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு நிலைகுலைவு இல்லை" என்றான் தாவீதரசன் (சங் 119:165).

பைபிளில் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் அதிகக் கவனம் செலுத்திப் படிக்குமுன்னர், ஒரு முறையாவது பைபிள் முழுவதையும் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை விரைவாக வாசித்துவிடுவது நல்லது. அப்படி வாசிக்கும்போது உனக்கு மறைநூலின் பொதுவான மையச் செய்தியாகிய "கிறிஸ்துவின் மூலம் மீட்பு" என்பது தெளிவாகிவிடும்.

அடுத்து புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் முதல் அடுத்துள்ள 21 புத்தகங்களையும் காலையில் ஓர் அத்தியாயமும், மாலையில் ஓர் அத்தியாயமுமாக வாசித்துத் தியானி. ஒவ்வொரு அத்தியாயத்தை வாசிக்கும்போதும் உனக்கு முக்கியமாகத் தோன்றுகிற வசனங்களை, வாக்கியங்களை, வரிகளை, வார்த்தைகளை அடிக்கோடிட்டுக்கொள். இந்த 22 புத்தகங்களும் இன்று நாம் இருக்கிற புதிய உடன்பாட்டுக் காலத்தின் செய்தியையும், திட்டத்தையும், ஒழுங்கையும் மனதில் பதித்துவிடும்.

வெளிப்படுத்தலையும் தானியேலையும் சேர்த்துப் படிக்கவேண்டும். இதற்கும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனப் புத்தகங்களின் விளக்கத்திற்கும் வேதாகம விளக்கவுரைகளைப் (Bible Commentaries) பயன்படுத்துவது நல்லது.

வேதத்தை ஓராண்டு அல்லது ஈராண்டில் கிரமமாகப் படித்து முடிக்க சில அட்டவணைகள் உண்டு. உன் வசதிக்கேற்ப ஒன்றைத் தெரிந்துகொண்டு அதைப் பின்பற்று. (பக்கம் 50-53). நீதிமொழிகள் புத்தகத்தில் தினம் ஓர் அத்தியாயம் வாசித்தால் மனிதரோடு எவ்விதம் ஞானமாய் நடந்துகொள்ள வேண்டும் என்று அது உனக்குப் போதிக்கும். அதில் 31 அத்தியாயங்கள் உண்டு.

ஒவ்வொரு நாள் காலையிலும் நீ வாசிக்கும் பகுதியில் அந்தந்த நாளுக்குத் தேவையான இறைச்செய்தியை எதிர்பார். அது ஒரு கட்டளையாகவோ, திருவாக்காகவோ, ஆலோசனையாகவோ, எச்சரிக்கையாகவோ இருக்கலாம். தினம் ஒரு வசனம் மனப்பாடம் பண்ணுதல் மிக்க நன்று. "நான் பாவம் செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" என்றான் தாவீது (சங் 119:11).

வெறுமனே நமது அறிவை வைத்து வேதப் புத்தகத்தைப் புரிந்துகொள்ள முடியாது. "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" என்ற ஜெபத்தை வேதத்தைத் திறக்கும்போதெல்லாம் செய்து விடு (சங் ).

இன்னும் கூடுதல் ஆலோசனைகள் தேவைப்படும்பொழுது எனக்கு எழுது. உனக்கு உதவ எப்பொழுதும் ஆயத்தம்.

அன்புள்ள அண்ணன்.



**கடிதம் 14**

# மாணவப் பருவத்தில் ஸ்டான்லி!

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துக்கள்.*

*சமீபத்தில் மதுரையில் நடந்த ஒரு கூட்டத்தில் நீங்கள் அருளுரையாற்றிக்கொண்டிருக்கும்போது மாணவனாயிருந்த நாட்களிலிருந்து நீங்கள் இறைவேண்டலிலும், மறைநூல் தியானத்திலும், திருப்பணியிலும் முழுக்க முழுக்க ஈடுபாடு கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டீர்கள். நாங்கள் நான்குபேர் அன்று எங்கள் விடுதியிலிருந்து அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தோம். நீங்கள் பேசியது எங்களுக்குப் பெரும் சவாலாயிருந்தது. உங்களைப்போலவே நாங்களும் எங்கள் மாணவ நாட்களை இறைவனோடு செலவிட விரும்புகிறோம். உங்களது கல்லூரி நாட்களின் தியான வாழ்க்கையைப்பற்றி விபரமாய் எங்களுக்கு ஒரு கடிதம் எழுதுவீர்களா? அது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.*

*உங்களுக்கு அதிக வேலையிருக்கும். ஆனால் "மாணவரின் நலனுக்காய் எதையும் செய்ய ஆயத்தம்" என்று கூறிய உங்களுக்கு இது சிரமமாயிருக்காது என்று நம்புகிறோம்!*

*இப்படிக்கு,*
*உங்கள் அன்புள்ள,*
*வின்சென்ட்.*

**பிரியமுள்ள தம்பி வின்சென்டுக்கு,**

உனக்கும் உன் நண்பருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

எனது கல்லூரி நாட்களின் தியான வாழ்க்கைபற்றிக் கேட்டெழுதியிருந்தாய். 1962ஆம் ஆண்டு பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியில் புகுமுக வகுப்பு (PUC) படித்துக்கொண்டிருக்கும்போது நவம்பர் 18 அன்று இயேசு என்னை இரட்சித்தார். 1963 முதல் 1968 வரை காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரியில் B.E.யும், 1968-70இல் சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரில் (IIT) M.Tech.உம் படித்து முடித்தேன். இப்படிக் கல்லூரியில் நான் படித்த 8 ஆண்டுகளையும் இயேசுவோடு, இயேசுவுக்காகச் செலவிடக் கிடைத்த பெரும் பாக்கியத்துக்காக அடிக்கடி என் ஆண்டவரை நான் துதிப்பதுண்டு.

அதிகாலை 4 அல்லது 5 மணிக்கு எழுந்திருந்து ஒரு மணி நேரத்தை அமைதி தியானத்தில் செலவிடுவேன். துதியுடன் இந்நேரத்தைத் துவங்குவேன். பின்பு ஏறத்தாழ ½ மணிநேரம் பைபிள் வாசிப்பேன். "அன்றன்றுள்ள ஆகாரம்" எப்படியும் அந்த வேளையில் ஆண்டவரிடமிருந்து கிடைத்துவிடும். சில நாட்களில் இரவு 12 முதல் 1 மணிவரை ஜெபத்தில் செலவிடுவேன். அதிகாலை தியானத்தை பரீட்சை நாட்களிலும் விட்டுவிடுவதில்லை.

கல்லூரிக்குப் போகிற வழியில் கடவுளுக்குத் துதி பாடிக்கொண்டே போவேன். பாக்கெட்டில் எப்பொழுதும் ஒரு New Testament வைத்திருப்பேன். அவ்வப்போது திறந்து ஒரு வசனத்தை வாசித்துவிட்டு அதைச் சுவைத்துக் கொண்டிருப்பேன்.

மாலை நேரங்கள் எப்பொழுதும் ஆண்டவருக்கே. 6 முதல் 7 மணிவரை அருகிலுள்ள ஒரு காட்டிற்குச் சென்று மரத்தடியில் அல்லது புதர்களுக்கருகில் தனி ஜெபத்திலும் இதய ஆராய்ச்சியிலும் செலவிடுவேன். 7 முதல் 8 வரை மற்ற மாணவச் சகோதரர்களோடு கூட்டுப் பிரார்த்தனை இருக்கும். தனி ஜெபத்தில் கிடைத்த வேதச் சத்தியங்களை தினமும் உடன் சகோதரரோடு பகிர்ந்துகொள்வேன். எங்கள் எல்லாருடைய வளர்ச்சிக்கும் பேருதவியாயிருந்தது இந்த மாலைக்கூடுகைதான்.

பின்பு படித்துவிட்டு, இரவில் 10.30 அல்லது 11 மணிக்குப் படுக்கச் செல்லும்போது ஒரு சங்கீதத்தை வாசித்து அதையே நினைத்துகொண்டு தூங்கிவிடுவேன். தூக்கம் இன்பமாயிருக்கும்.

வாரயிறுதியில் கிராம சந்திப்பு அல்லது இலக்கிய விநியோகப் பணிக்குச் சென்றுவிடுவோம். மாதத்திற்கு ஒருமுறை பொது உபவாச ஜெபமும், வாரத்திற்கொருமுறை தனி உபவாச ஜெபமும் உண்டு. இன்று ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பெரிய அளவில் நடைபெறும் எல்லாப் பணிகளுக்கும் அந்த மாணவ நாட்களிலேயே சிறிய அளவில் ஆண்டவர் எங்களுக்குப் பயிற்சி கொடுத்துவந்திருக்கிறார் என்று நினைக்கும்போது இதயம் நன்றியால் ததும்புகிறது. அவரது திட்டம்தான் என்னே!

அருமைத் தம்பியரே, மாணவ நாட்களைப் பயிற்சியின் காலம் என்று எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் எதிர்காலம் ஒளிமயமாயிருக்கும்.

அன்புடன்,
அண்ணன்.



**கடிதம் 15**

# மீன் பிடிப்பது எப்படி?

*[illegible],*

*சென்னை **[illegible]**இலுள்ள "**[illegible]**" குழுவின் சார்பில் இக்கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகிறேன். இக்கல்வி யாண்டில் நாங்கள் கிறிஸ்துவுக்காய்த் தீவிரமாகச் செயல்பட எண்ணியுள்ளோம். இவ்வாண்டின் துவக்க முதலே அநேக மாணவரை இயேசுவிடம் கொண்டுவர ஆவலாயிருக்கிறோம். நேற்று மாலைதான் இக்குழுவிலுள்ள நாங்கள் ஐந்து பேர் கூடி இதற்காக வேண்டினோம். நாங்கள் இம்முயற்சியில் எப்படிச் செயல்படவேண்டுமென்று தெளிவான ஆலோசனை தேவை. அண்ணன்மாரில் யாராவது ஒருவரை உடனே இங்கு அனுப்பிவையுங்கள், அல்லது விபரமாக ஒரு கடிதமாவது எழுதுங்கள். மறுபடி நாங்கள் சனிக்கிழமை கூடுவோம். அதற்குள் உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறோம்.*

*எங்களுக்காக மறவாது ஜெபியுங்கள்.*

*அன்புடன்,*
*பிரான்சிஸ் அந்தோணிராஜ்.*

**அன்புள்ள பிரான்சிஸ்,**

உனது மடல் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி. ஆகஸ்டு இறுதிக்குள் கட்டாயம் அண்ணன்மார் யாராவது உங்கள் குழுவை வந்து சந்திப்பார்கள். அதற்கு முன் சில ஆலோசனைகளை உங்களுக்கு உதவியாக எழுதுகிறேன்.

கல்லூரியிலும் விடுதியிலும் நீங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வதே உங்கள் முயற்சியில் வெற்றிகாண முதல் படியாகும். உடன் மாணவருடன் புன்முறுவலோடு பழகவேண்டும். ஆசிரியர்களை மதிக்க வேண்டும். வகுப்பில் ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும். Punctuality மிகவும் முக்கியம். படிப்பில் நன்கு கவனம் செலுத்தவேண்டும். உடையணிவதில்கூட ஓர் அம்சமும் மதிப்பும் இருக்கவேண்டும். தலை வாராது, அலங்கோலமாக முடி வளர்த்துத் திரிவதெல்லாம் இயேசுவின் மாணவருக்கு அழகல்ல.

"எவ்விதத்திலும் கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்துகொள் ளுங்கள்" (பிலி 1:27). வெறுமனே "Jesus Saves" என்று badge குத்திக் கொண்டால் அது மாணவரைக் கவர்ந்துவிடமுடியாது. சில சமயம் மாணவர் இதையெல்லாம் மதவெறியெனக் கருதி வெறுத்துவிடுவதுமுண்டு. தூண்டில் போட்டு மீன் பிடிக்கப்போகிறவர்கள் வெள்ளைச்சட்டை அணிந்துகொள்ள மாட்டார்கள் தெரியுமா ? அப்படியே நாமும் மக்களைக் கலைத்துவிடக்கூடாது.

மாணவருக்கு மதப்பிரச்சாரப் பிரசங்கங்களென்றால் பிடிக்காது. சாதாரண உரையாடலிலேயே, இயல்பான முறையில், இயேசுவை அறிமுகம் செய்ய வேண்டும். தனிமை, தோல்வி, ஏமாற்றம், மகிழ்ச்சியின்மை, பயம், குற்ற வுணர்வு, எதிர்காலத்தைப்பற்றிய அச்சம், நம்பிக்கையின்மை இவைகளே மாணவரின் பொதுவான பிரச்னைகள். இவையெல்லாவற்றிற்கும் இயேசு போதுமானவரென்று அறிவிக்கத் தெரிந்துகொள்ளுங்கள்.

நல்ல பிரசுரங்களை ஞானமாய் வழங்குங்கள். கொள்கை விவாதமில்லாமல் தெளிவாக நற்செய்தி அறிவிக்கப்படும் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். சற்று அக்கறை காட்டுபவர்களுக்காக குறிப்பாய்க் கடவுளிடம் வேண்டுங்கள். "மறைவில் பார்க்கிற கடவுள் யாவரும் காணும் வகையில் உங்களுக்குப் பலனளிப்பார்" (மத் 6:8).

உங்கள் முயற்சிகளுக்கு எதிர்ப்பு இல்லாமல் இருக்காது. ஆனால் எதிர்க்கிறவர்களை வெறுக்காது அவர்களுக்காகப் பிரார்த்தியுங்கள்.

இந்து மாணவர், முகமதிய மாணவர், புராட்டஸ்டண்டு மாணவர், ரோமன் கத்தோலிக்க மாணவர் இப்படி ஒவ்வொரு பிரிவினருக்கும் குறிப்பாய் எப்படி நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று உங்களைச் சந்திக்க வரும் அண்ணனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். "கிறிஸ்துவுக்குள் நீங்கள் எடுக்கும் முயற்சி வீண்போகாது" (1 கொரி 15:58).

ஜெபத்துடன்,
ஸ்டான்லி



**கடிதம் 16**

# *விஞ்ஞானமா, விவிலியமா?*

*அன்புள்ள அண்ணனுக்கு,*

*எங்கள் கல்லூரியில் மாதமொருமுறை □□□□□□ □□□□□ ஒன்று நடக்கும். ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு □□□□□□□ கொடுத்து இரண்டு அல்லது நான்கு மாணவரை விவாதிக்கச் சொல்லுவார்கள். அடுத்த மாதம் □□□□□□□ & □□□□□□□□ — அறிவியலும் இறையியலும் — என்ற பொருளில் விவாதம் நடக்கவிருக்கிறது. அதில் பேசவேண்டிய நால்வரில் நான் ஒருவன்தான் கிறிஸ்தவன். மற்றவர்களில் ஒருவன் கடவுள் இல்லை என்று சொல்லும் கூட்டத்தினன். அடுத்த இருவருக்கும் பைபிள் என்றால் ஆகாது. விவாதம் விறுவிறுப்பாயிருக்கப்போகிறது என்று எல்லாரும் பேசிக்கொள்ளுகிறார் கள். அதற்குச் சந்தேகம் இல்லை.*

*எனது விசுவாசத்தைக் குறித்துப் பேச இதை ஓர் அரிய சந்தர்ப் பமாகக் கருதி நான் ஜெபத்துடன் குறிப்புகளை ஆயத்தம் செய்து வருகிறேன். எனக்கு உதவியாயிருக்கக்கூடிய குறிப்புகள் ஏதுமிருப்பின் அனுப்பிவை யுங்கள். அடுத்த மாதம் 13 அன்று மாலை 3 முதல் 5 வரை விவாதம் நடக்கும். அந்த நேரத்தில் எனக்கு ஆண்டவர் தமது ஞானத்தை அருளும்படி பிரார்த்தித்துக்கொண்டிருங்கள். நன்றி.*

*இங்ஙனம்,*
*அன்புள்ள தம்பி,*
*டைட்டஸ் சாக்கோ.*

**பிரியமுள்ள டைட்டஸ்,**

உன் மடல் கிடைத்தது. தைரியமாய் ஆயத்தம் செய். ஆண்டவர் உன் முயற்சியை அற்புதமாக ஆசீர்வதிப்பார். உனக்காகக் கண்டிப்பபாய்ப் பிரார்த்தித்துக்கொண்டிருப்போம். நமது Prayer Circularஇலும் போடுகிறோம்.

Prof H. Enoch எழுதிய *"Creation or Evolution?"* என்ற புத்தகத்தை ஒருமுறை வாசித்துவிடு. இப்புத்தகம் மிகவும் எளிய நடையில் உள்ளது.

மேலைநாட்டுப் பத்திரிகையொன்றில் "Scientists who believed"— *"விசுவாசித்த விஞ்ஞானிகள்"*— என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையை இத்துடன் அனுப்பிவைக்கிறேன். பயனுள்ளதாயிருக்குமென்று நம்புகிறேன்.

### *Galileo Galilei (1564-1641)*



இத்தாலிய நாட்டைச் சேர்ந்த இவர் ஒரு கணித, பௌதீக மேதை. சூரியன் தன் அச்சிலேயே சுழல் கிறதென்பதை நிரூபித்தது இவர்தான். இவருக்கு பைபிள் என்றால் உயிர். பைபிள்தான் கடவுளுடைய வார்த்தை என்று திட்டமாக இவர் எழுதி வைத்துள்ளார். "பைபிளும் இயற்கையும் கடவுளின் சொல்லால் உருவானவை. பைபிள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது. இயற்கையானது கடவுளின் கட்டளைகளுக்கு அப்படியே கீழ்ப்படிகிறது" என்பது இவரது கோட்பாடு.

### *Johannes Kepler (1571-1630)*



இவர் இணையற்ற வான சாஸ்திரியும் அபூர்வமான கணித மேதையுமாவார். இவர் கிரகச்சுற்று பற்றி மூன்று விதிகளை telescope போன்ற கருவி ஏதுமின்றி கண்டுபிடித்தது இன்றும் விஞ்ஞானிகளுக்கு மர்ம மாயிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து இவர் அநேக புத்தகங்கள் எழுதியுள்ளார். தனது கணித அறிவைக்கொண்டு இயேசு கி. மு. 4இல்தான் பிறந்தார் எனக் கண்டுபிடித்தார். லூக்கா சுவிசேஷத்திலுள்ள வம்சவரலாறு பற்றிய விவாதங்களுக்கு அழகான விளக்கம் கொடுத்தார் இவர்.



### *Robert Boyle (1627-1691)*




நவீன விஞ்ஞானத்தின் தந்தை என்று அழைக்கப் படும் இவர்தான் elementக்கும் vompoundக்கும் வேறுபாடு காட்டிய முதல்வர். 300 ஆண்டுகள் கழிந்த பிறகும் "பாயில் விதி" மறுக்க முடியா விஞ்ஞான உண்மையாயிருக்கிறது. பைபிள் தத்துவ ரீதியானது என்றும், அது இயற்கை விதிகளுக்கு ஒத்தது என்றும் நிரூபிப்பதே தனது விஞ்ஞானக் கட்டுரைகளின் பிரதான நோக்கம் என்று எழுதியுள்ளார். அமெரிக்கா வில் பழங்குடி மொழி ஒன்றில் வேதம் வெளியிடப்பட தனியாகப் பணவுதவி கொடுத்தார் இவர்.

### *Isaac Newton (1642-1727)*



சரித்திரத்திலேயே மிகப் பெரிய விஞ்ஞான அறிவாளி இவர்தான். இவரது புவிஈர்ப்பு விசை விதியை அறியாதோர் இல்லை. Calculus, Reflecting Telescope ஆகியவற்றைக் கண்டுபிடித்தது இவர்தான். விவிலியம் பற்றி 14 இலட்சம் வார்த்தைகள் எழுதிய இவர் விஞ்ஞானம் பற்றியோ 10 இலட்சம் வார்த்தைகள் மட்டுமே எழுதியுள்ளார் எனக் கணிக்கப்படுகிறது. "அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் மனிதரால் ஏற்படுத்தப்பட்டவர்கள். அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளுமோ இறைவனால் அனுப்பப்பட்ட வர்கள். அவர்கள் கொடுத்த சுவிசேஷத்தை உலகின் எந்த சக்தியும் மாற்றமுடியாது" என்றார் இவர்.

### *Michael Faraday (1791-1867)*



Electrolysisஐக் கண்டுபிடித்தவர் இவர்தான். e.m.f. விசையை விளக்கியவரும், சக்திக்கும் ஜடப்பொரு ளுக்குமிடையேயுள்ள தொடர்பை முதலாவது கண்டு பிடித்தவரும் இவரே. இன்று விஞ்ஞான தொழில் நுட்ப உலகில் இன்றியமையாத மின்சார மோட்டாருக்கு அடிப்படை இவரது கண்டு பிடிப்புதான். லண்டனிலுள்ள ஒரு சிற்றாலயத்தில் இவர் பிரசங்கியாயிருந்தார். இவரது பிரசங்கத்தில் ஏறத்தாழ 150 இன்னும் வெளியிடப்படவிருக்கின்றன!

இன்றைய விஞ்ஞான உலகிற்கு அடிகோலும் விதிகளைக் கண்டுபிடித்த மாபெரும் மேதைகளுக்கு பைபிள்மீது இருந்த விசுவாசத்தையும் பாசத்தையும் எவரும் இன்று மறைத்துவிடமுடியாது. விவிலியமானது பிரதானமாக விஞ்ஞானப் புத்தகமல்ல; ஆனால் அது சரியான விஞ்ஞானத்தை எப்போதும் ஆமோதிக்கும்.

ஏறத்தாழ 2000 ஆண்டுகட்குமுன் பவுலடியார் தனது அடுத்த ஊழியன் தீமோத்தேயுவுக்குச் சரியாகத்தான் எழுதினார்—

"Avoid opposition of Science falsely so called" (1 தீமோத்தேயு 6:20)

Debate Class முடிந்ததும் நாங்களும் உன்னோடு மகிழ எங்களுக்கு எழுது.

அன்புள்ள,
அண்ணன்.



**கடிதம் 17**

# மாணவர் போராட்டம்!

*அன்புள்ள சகோதரன் ஸ்டான்லிக்கு,*

*வாலிபரின் பிரச்னைகளில் அவர்களுக்கு நட்புறவுடன் தாராளமாக நீங்கள் உதவுவது என்னை உங்கள்பால் அதிகம் கவர்ந்துவிட்டது. நீங்கள் நடத்திய பல கூட்டங்களில் நான் பங்குபெற்றிருக்கிறேன். கேள்வி-பதில் நேரத்தை அதிகமாய் ரசிப்பேன். திருமறையிலிருந்து ஒளிவுமறைவின்றி நீங்கள் கொடுக்கும் பதில்கள் எனது சொந்தப் பிரச்னைகள் பலவற்றைத் தீர்த்துவிட்டன.*

*ஆனால் அடிக்கடி என்னைக் குழப்புகிற ஒரு கேள்வி உண்டு. கிறிஸ்தவ மாணவனொருவன் ஸ்டிரைக்குகளில் கலந்துகொள்ளலாமா? அடிக்கடி நாங்கள் இதை விவாதித்தும் திருப்தியான முடிவுக்கு வந்தபாடில்லை. இப்பொழுதெல்லாம் ஆசிரியர்கூட போராட்டம் நடத்துகிறார்கள்! இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

*உங்கள் பதிலை ஆவலோடு எதிர்பார்க்கும்,*

*உங்கள் ரசிகன்,*
*ரமேஷ்.*

**அன்புள்ள ரமேஷ்,**

சிக்கலானதொரு கேள்வியைக் கேட்டுவிட்டாய்! உனது கேள்விக்கு "ஆம்–இல்லை" என்று எளிதாகப் பதில் சொல்லிவிடமுடியாது.

அக்காலத்திலெல்லாம் ஒருவேளை இவ்விதப் போராட்டங்கள் இருந்திருக்காது. எனவேதான் பைபிளில் இதற்கு நேரடியான பதில் இல்லை. ஆனால் நமது வாழ்க்கைக்கும் நடத்தைக்கும் போதுமான தத்துவங்கள் வேதத்திலுண்டு என நான் நம்புகிறேன். கீழ்க்கண்ட திருவசனங்களைப் பார்—

தலைவன் எவனும் "அடிக்கிறவனும் சண்டைபோடுகிறவனுமாயிராமல் பொறுமையுள்ளவனாய்" இருக்கவேண்டும் (1 தீமோ 3:2,3).

"கலகத்திற்கல்ல, சமாதானத்திற்கே கடவுள் காரணராயிருக்கிறார்" (1 கொரி 14:33).

"நீங்கள் மனிதருடைய சட்டங்கள் யாவற்றிற்கும் ஆண்டவருக்காகக் கீழ்ப்படியுங்கள்... நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியற்ற மனிதருடைய அறியாமையை அடக்குவது இறைச்சித்தமாயிருக்கிறது" (1 பேது 2:13-16).

வேதத்திலுள்ள இவ்வித வசனங்கள் ஒருபோதும், நியாயமான காரணத்திற்காகக்கூட, வன்முறைச் செயல்களை அனுமதிப்பதில்லை. தலைவர்கள் பிடிவாதமாகவும், நியாயமில்லாமலும் நடந்துகொள்ளும்போது, தங்கள் பிரச்னைகளையும் நியாயமான கோரிக்கைகளையும் பொதுமக்களுக்கு விளக்கிக்காட்ட மாணவர் நடத்தும் போராட்டமொன்றில் நீயும் கலந்துகொண்டு வகுப்பிற்குச் செல்லாதிருப்பதைப் பாவம் என்று சொல்லமுடியாது. ஆனால் கல்லெறிதல், திட்டுதல், வாகனங்களைக் கொளுத்துதல், பொருட்சேதம் விளைவித்தல் போன்ற செயல்கள் சரியன்று. அவ்விதக் காரியங்களில் உனக்குப் பங்கு கூடாது.

அங்கு மட்டுமே நீதி வாசமாயிருக்கும் புதிய வானம், புதிய பூமியைக்குறித்து உடன் மாணவருடன் பேச போராட்ட நாட்களை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள் (2 பேது 3:13). சமாதானப் பிரபுவாம் இயேசுவின்றி சமாதானமில்லை என்பதை அழுத்திக்கூறு.

உனது உடன் மாணவரின் பகைமையைச் சம்பாதிக்கக்கூடாது; அதே வேளையில் கண்ணியமற்ற செயல்களில் ஈடுபடவும் கூடாது. இதற்குரிய விவேகத்தை இறைவன் உனக்குத் தரட்டும்.

உனது சகோதரன்.



**கடிதம் 18**

# டெலிவிஷன் பார்க்கலாமா?

*பிரிய சகோதரர் அவர்களுக்கு,*

*நல்வாழ்த்துக்கள்!*

*எனது கேள்வி ஒன்றிற்குப் பதில் கிடைக்கும்படி இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.*

*இன்றைய டெலிவிஷன் புரட்சி மறுக்கமுடியாதது. தெருக்களிலும், சந்திகளிலும், பேருந்து நிலையங்களிலும், ரயில் நிலையங்களிலும் மக்களை அப்படியே கவர்ந்து நிற்கச் செய்வதற்கு தொலைக்காட்சிப் பெட்டிக்கு நிகரேதுமில்லை. நற்செய்தியைப் பரப்ப சில பிரசங்கிமாரும் இச்சாதனத்தைப் பயன்படுத்துகின்றனர். அதேவேளையில் இது ஒரு விக்கிரகம் என்றும் வீட்டிற்குள்ளேயே புகுந்துவிட்ட சினிமா கொட்டகை என்றும் கண்டனம் செய்வாருமுண்டு. வீட்டில் □□ வைத்திருப்பவர்களுக்கு ஏதோவொரு சபையில் திருப்பந்தி கொடுக்கமாட்டார்களென்றுகூட கேள்விப்பட்டேன். எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது. இதைக் குறித்து உங்கள் கருத்தென்ன?*

*சிரமத்திற்கு மன்னிக்கவும்.*

*அன்புடன்,*
*பிரின்ஸ்.*

அன்புள்ள பிரின்ஸ்,

சந்தேகத்தோடும் குழப்பத்தோடும் இருப்பதைவிட கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள்ளுதல் நலம்.

நான் மாணவனாயிருந்த காலத்தில் வானொலிப் பெட்டியையே சில பிரசங்கிமார் கண்டனம் செய்வதைக் கேட்டிருக்கிறேன்! காலப் போக்கில் ஏறத்தாழ எல்லாருமே ஒரு டிரான்சிஸ்டர் வைத்திருப்பதால் அது அங்கீகரிக் கப்பட்டுவிட்டது! நற்செய்திப் பணிக்கு வானொலி எவ்வளவாய்ப் பயன் படுகிறதென அறிவாயே. டெலிவிஷனும் அப்படித்தான்!

ஆனால் நாம் கவனமாயிருக்கவேண்டிய ஒரு காரியமுண்டு. விஞ்ஞான வளர்ச்சியானது மனுக்குலத்தின் நலனுக்காய் பயன்படும் அதே வேளையில் பிசாசானவன் அதையே மனிதரைக் கெடுக்கவும் அழிக்கவும் பயன்படுத்து வான். ஏனென்றால் அவனது தொழிலே கொல்லுவதும், அழிப்பதும், திருடு வதும்தான் (யோ 10:10). நமது அறிவை, அதுவும் குறிப்பாக சிறுவரின் சிந்தனா சக்தியை, வளர்க்கக்கூடிய நல்ல போதனா, கலாச்சார நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் வருவதுண்டு. அதே வேளையில் ஆபாசத்திற்கும் குறைவில்லை. பிள்ளைகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியை "on" செய்யத் தெரியும்; எப்பொழுது "off" செய்யவென்று தெரியாதென்றார் ஒருவர்! புரிகிறதல்லவா ?

ஒழுங்கும் தன்னடக்கமும் டெலிவிஷனின் தீங்குகளிலிருந்து நம்மைக் காக்கும். தொலைக்காட்சிப் பெட்டியிலே தொலைந்துவிடக்கூடாது! அது தொல்லைக்காட்சிப் பெட்டியாகிவிடும்!

உன் சகோதரன்.



**கடிதம் 19**

# பழைய நினைவுகள்!

*அன்புள்ள சகோதரனுக்கு,*

*மிகுந்த மனச்சோர்புடன் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். என்னால் இதிலிருந்து எழுந்து வெளிவர இயலவில்லை. காரணம் கடந்தகாலப் பாவங்கள் என் நினைவுக்கு வந்து என்னை வாட்டுகின்றன. குற்றவுணர்வுக்குப் பலியாகியுள்ளேன். கடவுள் உண்மையாகவே என்னை மன்னித்துவிட்டாரா என்று ஒரே சந்தேகம். தூக்கமில்லை. சாப்பிடவும் படிக்கவும் விருப்பமில்லை. என்ன செய்ய? விடுதலையுண்டா?*

*பணிவுடன்,*
*ரஞ்சன்.*

**தம்பி ரஞ்சனுக்கு,**

என்ன நடந்தது? பிசாசின் குரலுக்குச் செவிமடுப்பானேன்? பழைய பாவங்களை நினைப்பூட்டுவதுதான் அவன் தொழில். "குற்றம் சாட்டுகிறவன்" என்று வேதம் அவனுக்குப் பெயர் சூட்டியுள்ளது. "இரவும் பகலும்" அவனுக்கு இதே வேலைதான் (வெளி 12:10,11). ஆனால் மனந்திரும்பி இறைவனிடம் வந்துவிட்ட உனது பாவங்களை அவர் என்ன செய்துவிட்டார் என்று தெரியுமா?

❒ அவர் நமது பாவங்களையெல்லாம் "கடலின் ஆழங்களில்" போட்டுவிட்டார்! (மீகா 7:19).

❒ நமது மீறுதல்களை "மேகத்தைப் போலவும்" நமது பாவங்களைக் "கார்மேகத்தைப் போலவும்" அகற்றிவிட்டார்! (ஏசா 44:22).

❒ "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய்" நமது பாவங்களை நம்மைவிட்டு விலக்கிவிட்டார்! (சங் 103:12).

❒ நமது பாவங்களையெல்லாம் அவரது "முதுகுக்குப் பின்னாக" எறிந்துவிட்டார்! (ஏசா 38:17).

இதுதான் இறைவனது நாற்பரிமாண அன்பு என்பது! அதின் ஆழம், உயரம், அகலம், நீளம்!

போட்டுவிட்டார்! அகற்றிவிட்டார்! விலக்கிவிட்டார்! எறிந்துவிட்டார்!

மன்னிக்கப்பட்டட பாவங்கள் மறக்கப்பட்ட பாவங்களாம்! அவற்றை அவர் நினைப்பதேயில்லை (எரே 31:34). இயேசுவின் இரத்தம் அவைகளை அப்படியே மூடிவிட்டது (எபி 8:12; 10:17). நீ கடவுளுடைய சொந்தப் பிள்ளை. உன்னைக் குற்றஞ்சாட்டித் தீர்க்க யாரால் முடியும்? (ரோ 8:34). பிசாசின் பொய்யை நம்பாதே. திருவசனத்தின் சத்தியத்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையாலும் அவனுக்கு எதிர்த்து நில். உனது வெற்றியை முழங்கிடு!

நேரம் கிடைக்கும்போது கடிதமெழுது. எனது ஜெபம் உனக்குண்டு.

உன் அண்ணன்.



**கடிதம் 20**

# எதிர்காலம் எப்படியோ?

*சகோதரன் ஸ்டான்லி அவர்களுக்கு,*

*அன்பு கலந்த வாழ்த்துக்கள்!*

*கடந்த மூன்று ஆண்டுகளும் எங்கள் கல்லூரி ஜெபக்குழுவில் கலந்துகொண்டு பெற்ற ஏராளம் ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். நமது இயக்கத்தின் "இயேசுவுக்கு மாணவர்" பிரிவின் தலைவர்கள் அடிக்கடி எங்களை வந்து சந்தித்தது பேருதவியாயிருந்தது. இது எனது இறுதியாண்டு. ஏப்ரலில் பரீட்சை எழுதவேண்டும். ஆனால் எதிர்காலத்தைக் குறித்த கவலை ஏற்கனவே என்னை ஆட்டிப்படைக்கிறது. நமது நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம்தான் தெரிந்ததே. இதற்குமேல் படிக்கவைக்கவும் பெற்றோருக்கு முடியாது. நாளையை நினைத்தாலே நடுங்குகிறேன். தயவுசெய்து எனக்காக ஜெபியுங்கள்.*

*நன்றி.*

*அன்புள்ள,*
*சுகுமார்.*

**பிரிய சுகுமார்,**

பெப்ருவரி 13 அன்று நீ எழுதிய கடிதம் கிடைத்தது. எதிர்காலத்தைக் குறித்த உனது அச்சத்தை நான் நன்றாய்ப் புரியமுடிகிறது. எதிர்காலம் *எப்படி* இருக்கும் என்பதைவிட அது *எவரிடம்* இருக்கிறது என்றறிவதே முக்கியம். தாவீதரசன் இப்படிச் சொன்னான்: "நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன். என் காலங்கள் உமது கரத்திலிருக்கின்றன. நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்!" (சங் 31:14,15,17).

அப்படியே இயேசு கூறுவதையும் கேள்: "கவலைப்படுவதால் உங்கள் எவன் தன் உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்? ஆகையால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். முதலாவது, இறையரசையும் அவருக்கு ஏற்பவற்றையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் (உடலுக்கடுத்தவைகளெல்லாம்) உங்களுக்குக் கூட்டிக் கொடுக்கப்படும்" (மத் 6:27-33).

கவலைப்படுவதை நிறுத்தி கர்த்தரிடம் ஜெபிக்கத் துவங்கு. மிக எளியதொரு குடும்பத்திலிருந்து நான் வருகிறேன். நான் நன்கு படிக்கிற மாணவனாயிருந்தாலும் என் பெற்றோர் தங்கள் பொருளாதார வசதியின்மையால் என்னை உயர்படிப்புக்கு அனுப்ப ஒரு நாளும் நினைக்கவில்லை. கடவுளோ தமது இரக்கத்தினால் எவ்வித சிபாரிசுமின்றி மேற்பட்டப் படிப்புக்கு இடம் தந்து இலவச உதவித் தொகையும் பெறச் செய்தார். நம் தேவன் நல்லவரல்லவா?

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாது, எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களைத் துதியுடன் ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது அறிவுக்கு அப்பாற்பட்ட தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி 4:6,7).

என் பாட்டியம்மா எனக்கு மனனம் செய்யக் கற்றுத்தந்த ஒரு திருவசனம் நினைவுக்கு வருகிறது: "சிங்கக்குட்டிகள் இரையில்லாமல் பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" (சங் 34:10).

உனது தேர்வுக்காகவும், எதிர்காலத்துக்காகவும் நான் ஜெபித்துக்கொண்டிருப்பேன். கவலைப்படாமல் பாடங்களில் கவனம் செலுத்து. இயேசு உன்னோடிருக்கிறாரே!

உன் சகோதரன்,
R. ஸ்டான்லி.



# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...

**ஜனவரி**

| | *காலை* **மத்தேயு** | *மாலை* **ஆதி** |
|---|---|---|
| *1* | 1 | 1–3 |
| *2* | 2 | 4–6 |
| *3* | 3 | 7–9 |
| *4* | 4 | 10–12 |
| *5* | 5:1–26 | 13–15 |
| *6* | 5:27–48 | 16, 17 |
| *7* | 6:1–18 | 18, 19 |
| *8* | 6:19–34 | 20–22 |
| *9* | 7 | 23, 24 |
| *10* | 8:1–17 | 25, 26 |
| *11* | 8:18–34 | 27, 28 |
| *12* | 9:1–17 | 29, 30 |
| *13* | 9:18–38 | 31, 32 |
| *14* | 10:1–20 | 33–35 |
| *15* | 10:21–42 | 36–38 |
| *16* | 11 | 39, 40 |
| *17* | 12:1–23 | 41, 42 |
| *18* | 12:24–50 | 43–45 |
| *19* | 13:1–30 | 46–48 |
| *20* | 13:31–58 | 49, 50 |
| | | **யாத்** |
| *21* | 14:1–21 | 1–3 |
| *22* | 14:22–36 | 4–6 |
| *23* | 15:1–20 | 7, 8 |
| *24* | 15:21–39 | 9–11 |
| *25* | 16 | 12, 13 |
| *26* | 17 | 14, 15 |
| *27* | 18:1–20 | 16–18 |
| *28* | 18:21–35 | 19, 20 |
| *29* | 19 | 21, 22 |
| *30* | 20:1–16 | 23, 24 |
| *31* | 20:17–34 | 25, 26 |

**பெப்ருவரி**

| | *காலை* **மத்தேயு** | *மாலை* **யாத்** |
|---|---|---|
| *1* | 21:1–22 | 27, 28 |
| *2* | 21:23–46 | 29, 30 |
| *3* | 22:1–22 | 31–33 |
| *4* | 22:23–46 | 34, 35 |
| *5* | 23:1–22 | 36–38 |
| *6* | 23:23–39 | 39, 40 |
| | | **லேவி** |
| *7* | 24:1–28 | 1–3 |
| *8* | 24:29–51 | 4, 5 |
| *9* | 25:1–30 | 6, 7 |
| *10* | 25:31–46 | 8–10 |
| *11* | 26:1–25 | 11, 12 |
| *12* | 26:26–50 | 13 |
| *13* | 26:51–75 | 14 |
| *14* | 27:1–26 | 15, 16 |
| *15* | 27:27–50 | 17, 18 |
| *16* | 27:51–66 | 19, 20 |
| *17* | 28 | 21, 22 |
| | **மாற்கு** | |
| *18* | 1:1–22 | 23, 24 |
| *19* | 1:23–45 | 25 |
| *20* | 2 | 26, 27 |
| | | **எண்** |
| *21* | 3:1–19 | 1, 2 |
| *22* | 3:20–35 | 3, 4 |
| *23* | 4:1–20 | 5, 6 |
| *24* | 4:21–41 | 7, 8 |
| *25* | 5:1–20 | 9–11 |
| *26* | 5:21–43 | 12–14 |
| *27* | 6:1–29 | 15, 16 |
| *28* | 6:30–56 | 17–19 |
| *29* | 7:1–13 | 20–22 |

**மார்ச்**

| | *காலை* **மாற்கு** | *மாலை* **எண்** |
|---|---|---|
| *1* | 7:14–37 | 23–25 |
| *2* | 8:1–21 | 26, 27 |
| *3* | 8:22–38 | 28–30 |
| *4* | 9:1–29 | 31–33 |
| *5* | 9:30–50 | 34–36 |
| | | **உபா** |
| *6* | 10:1–31 | 1, 2 |
| *7* | 10:32–52 | 3, 4 |
| *8* | 11:1–18 | 5–7 |
| *9* | 11:19–33 | 8–10 |
| *10* | 12:1–27 | 11–13 |
| *11* | 12:28–44 | 14–16 |
| *12* | 13:1–20 | 17–19 |
| *13* | 13:21–37 | 20–22 |
| *14* | 14:1–26 | 23–25 |
| *15* | 14:27–53 | 26, 27 |
| *16* | 14:54–72 | 28, 29 |
| *17* | 15:1–25 | 30, 31 |
| *18* | 15:26–47 | 32–34 |
| | | **யோசு** |
| *19* | 16 | 1–3 |
| | **லூக்கா** | |
| *20* | 1:1–20 | 4–6 |
| *21* | 1:21–38 | 7–9 |
| *22* | 1:39–56 | 10–12 |
| *23* | 1:57–80 | 13–15 |
| *24* | 2:1–24 | 16–18 |
| *25* | 2:25–52 | 19–21 |
| *26* | 3 | 22–24 |
| | | **நியா** |
| *27* | 4:1–30 | 1–3 |
| *28* | 4:31–44 | 4–6 |
| *29* | 5:1–16 | 7, 8 |
| *30* | 5:17–39 | 9, 10 |
| *31* | 6:1–26 | 11, 12 |

| ஏப்ரல் | காலை<br>லூக்கா | மாலை<br>நியா |
|---|---|---|
| 1 | 6:27–49 | 13–15 |
| 2 | 7:1–30 | 16–18 |
| 3 | 7:31–50 | 19–21 |
| 4 | 8:1–25 | ரூத் |
| | | 1 சாமு |
| 5 | 8:26–56 | 1–3 |
| 6 | 9:1–17 | 4–6 |
| 7 | 9:18–36 | 7–9 |
| 8 | 9:37–62 | 10–12 |
| 9 | 10:1–24 | 13, 14 |
| 10 | 10:25–42 | 15, 16 |
| 11 | 11:1–28 | 17, 18 |
| 12 | 11:29–54 | 19–21 |
| 13 | 12:1–31 | 22–24 |
| 14 | 12:32–59 | 25, 26 |
| 15 | 13:1–22 | 27–29 |
| 16 | 13:23–35 | 30, 31 |
| | | 2 சாமு |
| 17 | 14:1–24 | 1, 2 |
| 18 | 14:25–35 | 3–5 |
| 19 | 15:1–10 | 6–8 |
| 20 | 15:11–32 | 9–11 |
| 21 | 16 | 12, 13 |
| 22 | 17:1–19 | 14, 15 |
| 23 | 17:20–37 | 16–18 |
| 24 | 18:1–23 | 19, 20 |
| 25 | 18:24–43 | 21, 22 |
| 26 | 19:1–27 | 23, 24 |
| | | 1 இரா |
| 27 | 19:28–48 | 1, 2 |
| 28 | 20:1–26 | 3–5 |
| 29 | 20:27–47 | 6, 7 |
| 30 | 21:1–19 | 8, 9 |

| மே | காலை<br>லூக்கா | மாலை<br>1 இரா |
|---|---|---|
| 1 | 21:20–38 | 10, 11 |
| 2 | 22:1–20 | 12, 13 |
| 3 | 22:21–46 | 14, 15 |
| 4 | 22:47–71 | 16–18 |
| 5 | 23:1–25 | 19, 20 |
| 6 | 23:26–56 | 21, 22 |
| | | 2 இரா |
| 7 | 24:1–35 | 1–3 |
| 8 | 24:36–53 | 4–6 |
| | யோவான் | |
| 9 | 1:1–28 | 7, 8, 9 |
| 10 | 1:29–51 | 10–12 |
| 11 | 2 | 13, 14 |
| 12 | 3:1–18 | 15, 16 |
| 13 | 3:19–38 | 17, 18 |
| 14 | 4:1–30 | 19–21 |
| 15 | 4:31–54 | 22, 23 |
| 16 | 5:1–24 | 24, 25 |
| | | 1 நாளா |
| 17 | 5:25–47 | 1–3 |
| 18 | 6:1–21 | 4–6 |
| 19 | 6:22–44 | 7–9 |
| 20 | 6:45–71 | 10–12 |
| 21 | 7:1–27 | 13–15 |
| 22 | 7:28–53 | 16–18 |
| 23 | 8:1–27 | 19–21 |
| 24 | 8:28–59 | 22–24 |
| 25 | 9:1–23 | 25–27 |
| 26 | 9:24–41 | 28, 29 |
| | | 2 நாளா |
| 27 | 10:1–23 | 1–3 |
| 28 | 10:24–42 | 4–6 |
| 29 | 11:1–29 | 7–9 |
| 30 | 11:30–57 | 10–12 |
| 31 | 12:1-26 | 13, 14 |

| ஜூன் | காலை<br>யோவான் | மாலை<br>2 நாளா |
|---|---|---|
| 1 | 12:27–50 | 15, 16 |
| 2 | 13:1–20 | 17, 18 |
| 3 | 13:21–38 | 19, 20 |
| 4 | 14 | 21, 22 |
| 5 | 15 | 23, 24 |
| 6 | 16 | 25–27 |
| 7 | 17 | 28, 29 |
| 8 | 18:1–18 | 30, 31 |
| 9 | 18:19–40 | 32, 33 |
| 10 | 19:1–22 | 34–36 |
| | | எஸ்றா |
| 11 | 19:23–42 | 1, 2 |
| 12 | 20 | 3–5 |
| 13 | 21 | 6–8 |
| | அப் | |
| 14 | 1 | 9, 10 |
| | | நெகே |
| 15 | 2:1–21 | 1–3 |
| 16 | 2:22–47 | 4–6 |
| 17 | 3 | 7–9 |
| 18 | 4:1–22 | 10, 11 |
| 19 | 4:23–37 | 12, 13 |
| | | எஸ்தர் |
| 20 | 5:1–21 | 1, 2 |
| 21 | 5:22–42 | 3–5 |
| 22 | 6 | 6–8 |
| 23 | 7:1–21 | 9, 10 |
| | | யோபு |
| 24 | 7:22–43 | 1, 2 |
| 25 | 7:44–60 | 3, 4 |
| 26 | 8:1–25 | 5–7 |
| 27 | 8:26–40 | 8–10 |
| 28 | 9:1–21 | 11–13 |
| 29 | 9:22–43 | 14–16 |
| 30 | 10:1–23 | 17–19 |



| ஜூலை | காலை<br>அப் | மாலை<br>யோபு |
|---|---|---|
| 1 | 10:24–48 | 20, 21 |
| 2 | 11 | 22–24 |
| 3 | 12 | 25–27 |
| 4 | 13:1–25 | 28, 29 |
| 5 | 13:26–52 | 30, 31 |
| 6 | 14 | 32, 33 |
| 7 | 15:1–21 | 34, 35 |
| 8 | 15:22–41 | 36, 37 |
| 9 | 16:1–21 | 38–40 |
| 10 | 16:22–40 | 41, 42 |
| | | சங்கீதம் |
| 11 | 17:1–15 | 1–3 |
| 12 | 17:16–34 | 4–6 |
| 13 | 18 | 7–9 |
| 14 | 19:1–20 | 10–12 |
| 15 | 19:21–41 | 13–15 |
| 16 | 20:1–16 | 16, 17 |
| 17 | 20:17–38 | 18, 19 |
| 18 | 21:1–17 | 20–22 |
| 19 | 21:18–40 | 23–25 |
| 20 | 22 | 26–28 |
| 21 | 23:1–15 | 29, 30 |
| 22 | 23:16–35 | 31, 32 |
| 23 | 24 | 33, 34 |
| 24 | 25 | 35, 36 |
| 25 | 26 | 37–39 |
| 26 | 27:1–26 | 40–42 |
| 27 | 27:27–44 | 43–45 |
| 28 | 28 | 46–48 |
| | ரோமர் | |
| 29 | 1 | 49, 50 |
| 30 | 2 | 51–53 |
| 31 | 3 | 54–56 |

| ஆகஸ்டு | காலை<br>ரோமர் | மாலை<br>சங்கீதம் |
|---|---|---|
| 1 | 4 | 57–59 |
| 2 | 5 | 60–62 |
| 3 | 6 | 63–65 |
| 4 | 7 | 66, 67 |
| 5 | 8:1–21 | 68, 69 |
| 6 | 8:22–39 | 70, 71 |
| 7 | 9:1–15 | 72, 73 |
| 8 | 9:16–33 | 74–76 |
| 9 | 10 | 77, 78 |
| 10 | 11:1–18 | 79, 80 |
| 11 | 11:19–36 | 81–83 |
| 12 | 12 | 84–86 |
| 13 | 13 | 87, 88 |
| 14 | 14 | 89, 90 |
| 15 | 15:1–13 | 91–93 |
| 16 | 15:14–33 | 94–96 |
| 17 | 16 | 97–99 |
| | 1 கொரி | |
| 18 | 1 | 100–102 |
| 19 | 2 | 103, 104 |
| 20 | 3 | 105, 106 |
| 21 | 4 | 107–109 |
| 22 | 5 | 110–112 |
| 23 | 6 | 113–115 |
| 24 | 7:1–19 | 116–118 |
| 25 | 7:20–40 | 119:1–88 |
| 26 | 8 | 119:89-176 |
| 27 | 9 | 120–122 |
| 28 | 10:1–18 | 123–125 |
| 29 | 10:19–33 | 126–128 |
| 30 | 11:1–16 | 129–131 |
| 31 | 11:17–34 | 132–134 |

| செப்டம்பர் | காலை<br>1 கொரி | மாலை<br>சங்கீதம் |
|---|---|---|
| 1 | 12 | 135, 136 |
| 2 | 13 | 137–139 |
| 3 | 14:1-20 | 140–142 |
| 4 | 14:21-40 | 143–145 |
| 5 | 15:1-28 | 146, 147 |
| 6 | 15:29-58 | 148–150 |
| | | நீதி |
| 7 | 16 | 1, 2 |
| | 2 கொரி | |
| 8 | 1 | 3–5 |
| 9 | 2 | 6, 7 |
| 10 | 3 | 8, 9 |
| 11 | 4 | 10–12 |
| 12 | 5 | 13–15 |
| 13 | 6 | 16–18 |
| 14 | 7 | 19–21 |
| 15 | 8 | 22–24 |
| 16 | 9 | 25, 26 |
| 17 | 10 | 27–29 |
| 18 | 11:1-15 | 30, 31 |
| | | பிரசங்கி |
| 19 | 11:16-33 | 1–3 |
| 20 | 12 | 4–6 |
| 21 | 13 | 7–9 |
| | கலா | |
| 22 | 1 | 10–12 |
| | | உன் |
| 23 | 2 | 1–3 |
| 24 | 3 | 4, 5 |
| 25 | 4 | 6–8 |
| | | ஏசாயா |
| 26 | 5 | 1, 2 |
| 27 | 6 | 3, 4 |
| | எபே | |
| 28 | 1 | 5, 6 |
| 29 | 2 | 7, 8 |
| 30 | 3 | 9, 10 |

| அக்டோபர் | | |
|---|---|---|
| | *காலை* | *மாலை* |
| | **எபேசியர்** | **ஏசாயா** |
| ***1*** | 4 | 11–13 |
| ***2*** | 5:1–16 | 14–16 |
| ***3*** | 5:17–33 | 17–19 |
| ***4*** | 6 | 20–22 |
| | **பிலிப்பியர்** | |
| ***5*** | 1 | 23–25 |
| ***6*** | 2 | 26, 27 |
| ***7*** | 3 | 28, 29 |
| ***8*** | 4 | 30, 31 |
| | **கொலோ** | |
| ***9*** | 1 | 32, 33 |
| ***10*** | 2 | 34–36 |
| ***11*** | 3 | 37, 38 |
| ***12*** | 4 | 39, 40 |
| | **1 தெச** | |
| ***13*** | 1 | 41, 42 |
| ***14*** | 2 | 43, 44 |
| ***15*** | 3 | 45, 46 |
| ***16*** | 4 | 47–49 |
| ***17*** | 5 | 50–52 |
| | **2 தெச** | |
| ***18*** | 1 | 53–55 |
| ***19*** | 2 | 56–58 |
| ***20*** | 3 | 59–61 |
| | **1 தீமோ** | |
| ***21*** | 1 | 62–64 |
| ***22*** | 2 | 65, 66 |
| | | **எரே** |
| ***23*** | 3 | 1, 2 |
| ***24*** | 4 | 3–5 |
| ***25*** | 5 | 6–8 |
| ***26*** | 6 | 9–11 |
| | **2 தீமோ** | |
| ***27*** | 1 | 12–14 |
| ***28*** | 2 | 15–17 |
| ***29*** | 3 | 18, 19 |
| ***30*** | 4 | 20, 21 |
| | **தீத்து** | |
| ***31*** | 1 | 22, 23 |

| நவம்பர் | | |
|---|---|---|
| | *காலை* | *மாலை* |
| | **தீத்து** | **எரேமியா** |
| ***1*** | 2 | 24–26 |
| ***2*** | 3 | 27–29 |
| ***3*** | **பிலேமோன்** | 30, 31 |
| | **எபிரெயர்** | |
| ***4*** | 1 | 32, 33 |
| ***5*** | 2 | 34–36 |
| ***6*** | 3 | 37–39 |
| ***7*** | 4 | 40–42 |
| ***8*** | 5 | 43–45 |
| ***9*** | 6 | 46, 47 |
| ***10*** | 7 | 48, 49 |
| ***11*** | 8 | 50 |
| ***12*** | 9 | 51, 52 |
| | | **புலம்** |
| ***13*** | 10:1–18 | 1, 2 |
| ***14*** | 10:19–39 | 3–5 |
| | | **எசேக்** |
| ***15*** | 11:1–19 | 1, 2 |
| ***16*** | 11:20–40 | 3, 4 |
| ***17*** | 12 | 5–7 |
| ***18*** | 13 | 8–10 |
| | **யாக்கோபு** | |
| ***19*** | 1 | 11–13 |
| ***20*** | 2 | 14, 15 |
| ***21*** | 3 | 16, 17 |
| ***22*** | 4 | 18, 19 |
| ***23*** | 5 | 20, 21 |
| | **1 பேதுரு** | |
| ***24*** | 1 | 22, 23 |
| ***25*** | 2 | 24–26 |
| ***26*** | 3 | 27–29 |
| ***27*** | 4 | 30–32 |
| ***28*** | 5 | 33, 34 |
| | **2 பேதுரு** | |
| ***29*** | 1 | 35, 36 |
| ***30*** | 2 | 37–39 |

| டிசம்பர் | | |
|---|---|---|
| | *காலை* | *மாலை* |
| | **2 பேதுரு** | **எசேக்** |
| ***1*** | 3 | 40, 41 |
| | **1 யோ** | |
| ***2*** | 1 | 42–44 |
| ***3*** | 2 | 45, 46 |
| ***4*** | 3 | 47, 48 |
| | | **தானியேல்** |
| ***5*** | 4 | 1, 2 |
| ***6*** | 5 | 3, 4 |
| ***7*** | **2 யோ** | 5–7 |
| ***8*** | **3 யோ** | 8–10 |
| ***9*** | **யூதா** | 11, 12 |
| | **வெளி** | **ஓசியா** |
| ***10*** | 1 | 1–4 |
| ***11*** | 2 | 5–8 |
| ***12*** | 3 | 9–11 |
| ***13*** | 4 | 12–14 |
| ***14*** | 5 | **யோவேல்** |
| | | **ஆமோஸ்** |
| ***15*** | 6 | 1–3 |
| ***16*** | 7 | 4–6 |
| ***17*** | 8 | 7–9 |
| ***18*** | 9 | **ஒபதியா** |
| ***19*** | 10 | **யோனா** |
| | | **மீகா** |
| ***20*** | 11 | 1–3 |
| ***21*** | 12 | 4, 5 |
| ***22*** | 13 | 6, 7 |
| ***23*** | 14 | **நாகூம்** |
| ***24*** | 15 | **ஆபகூக்** |
| ***25*** | 16 | **செப்** |
| ***26*** | 17 | **ஆகாய்** |
| | | **சகரியா** |
| ***27*** | 18 | 1–4 |
| ***28*** | 19 | 5–8 |
| ***29*** | 20 | 9–12 |
| ***30*** | 21 | 13, 14 |
| ***31*** | 22 | **மல்கியா** |



# தேர்வுகளுக்காய் வேண்டல்

எல்லா ஞானத்திற்கும் அறிவிற்கும் காரணரே,
நீர் எனக்குத் தந்திருக்கும் கல்வி வசதிகளுக்காய் உம்மைப் போற்றுகிறேன். காடு மலைகளிலும் கவனிப்பாரற்ற கிராமங்களிலும், பள்ளிக்குச் செல்ல வாய்ப்பே இல்லாததால், எழுத்தறிவும் நாகரீகமும் இல்லாது பின்தங்கியே வாழும் சிறுவர் சிறுமியரைவிட நீர் எனக்குத் தந்துள்ள வசதிகளுக்காய் உம்மை வாழ்த்துகிறேன்.
எனக்குக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்காகவும் எனது கல்விக்காய்ச் செலவழித்து எல்லா முயற்சிகளையும் எடுக்கும் எனது பெற்றோருக்காகவும் உமக்கு நன்றி சொல்லுகிறேன்.

ஞான சொரூபியே,
வரவிருக்கும் பரீட்சைக்காய் உம்மிடம் வருகிறேன்.
உம்மால் அன்றி என்னால் ஆகும் என்று சொல்ல ஒன்றுமில்லை. ஓரளவு படித்திருக்கிறேன்; ஆனால் திருப்தியில்லையப்பா. கல்வியாண்டின் துவக்கத்திலிருந்தே கிரமமாகவும் சிரமப்பட்டும் படிக்காத எனது குற்றத்தை எனக்கு மன்னியும். நான் படித்த பாடங்கள் எனது ஞாபகத்தில் தெளிவாய் இருக்க உதவிசெய்யும். எனது உடல்நிலை எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் காத்துக்கொள்ளும். எனது கவனத்தையும் சிந்தையையும் சிதறடிக்கச் செய்யும் எல்லாவற்றையும் என்னைவிட்டு அகற்றும்.

பரீட்சைகளை எழுதும்போது உமது திருமுன்னிலை என்னோடு இருக்கட்டும், தேவா. கடினமான கேள்விகளைப் பார்த்து நான் பதறாதிருக்கச் செய்யும். மற்ற மாணவரது விடைத்தாள்களைப் பார்த்து எழுதுவது, மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது போன்ற மட்டரகக் காரியங்களில் ஈடுபடாதிருக்கச் செய்யும்.
தேர்வு எழுதிக்கொண்டிருக்கும்போது எனது நினைவாற்றல் கூர்மையாயிருக்கட்டும். என்னோடு தேர்வெழுதும் உடன் மாணவ மாணவியரையும் ஆசீர்வதியும். ஏழை மாணவரைச் சிறப்பாய்க் கண்பாரும்.

அனைத்தும் அறிந்தவரே,
எனது விடைத்தாள்களைத் திருத்தவிருக்கும் ஆசிரியர் ஆசிரியைகளுக்காய்ப் பிரார்த்திக்கிறேன். அவர்களது கண்களில் எனக்குத் தயவு கிடைக்கச் செய்யும். ஒருவேளை என்னைத் தெரிந்த எவராவது எனது விடைத்தாள்களைத் திருத்த நேர்ந்தால், என்னைப் பற்றிய விருப்பு வெறுப்புக்கு அவர் இடம் தராதிருக்க உதவிசெய்யும். ஆண்டவரே, நான் உம்மையே நம்பியிருக்கிறேன். நான் வெட்கப் பட்டுப் போகாதபடிச் செய்யும். “எனக்காக யாவும் செய்துமுடிப்பார்; என் கர்த்தர் வாக்கு மாறிடார்; தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும் தவறாமல் நிறைவேற்றுவார்”
என்று பாடிக்கொண்டேயிருக்கிறேனப்பா!

யோசேப்புக்கு ஞானம் கொடுத்து அவனை எகிப்திலும், தானியேலுக்கு அறிவு தந்து அவனைப் பாபிலோனிலும் உயர்த்திய உன்னதரே, நான் உம்மையே நம்பியிருக்கிறதால் நான் உமக்குப் புகழ் சேர்க்கும்படி என்னை ஆசீர்வதியும். உமது ஞானப்பிள்ளை இயேசுவின் நாமத்தில் இறைஞ்சுகிறேன், தந்தாய்! ஆமென்!

கிறிஸ்தவ வாழ்வில்
நிறைவாய் வளர உணவளிக்கும்
ஒரு தினசரித் தியான நூல்...




*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், பெங்காலி, மலையாளம்,
தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

*பிறந்த நாள், திருமணம், ஆண்டு விழா, பட்டமளிப்பு, புத்தாண்டு
போன்றவற்றிற்குச் சிறந்த வெகுமதி!*

*கிடைக்குமிடம்—*

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
*Tel: 044-28450411 <blc@blessingyouthmission.org>*



## ஆசிரியரது பிற நூல்கள்—

- ***அறிவூட்டும் அகவுணர்வுகள்***
- ***ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?***
- ***ஆனந்த அறுவடை***
- ***இரட்சிக்கப்படுவது எப்படி?***
- ***உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்***
- ***ஊழியரும் மக்களும்***
- ***எதிர்நீச்சல் வாலிபர்***
- ***எப்படி ஜெபிக்கக்கூடாது?***
- ***ஐந்தப்பம் இருமீன்***
- ***கண் திறக்கும் கட்டுரைகள்***
- ***காட்டுத் தேன்***
- ***கீழ்ப்படிதலே மேல்படி!***
- ***சமநிலைக் கிறிஸ்தவன்***
- ***சிறு நரிகள்***
- ***திறந்த வானம்***
- ***திரும்பிய மனிதன்***
- ***தெளிவான பதில்கள் (தொகுப்பு ஒன்று)***
- ***தெளிவான பதில்கள் (தொகுப்பு இரண்டு)***
- ***நாளொரு மேனி (தின தியானம்)***
- ***நெஞ்சில் நெருப்பு***
- ***பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!***
- ***பொற்பழங்கள்***
- ***வல்லமை தேவனுடையது!***
- ***விசுவாச வாழ்வு***

**விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.**
**இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச் செய்திகள் அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—**

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
*Tel: 044-28450411 <blc@blessingyouthmission.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

- ❒ ***My Letters***
  Stanley talks heart to heart
  with the Visitors of this Website.
- ❒ ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ❒ ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for
  Personal Meditation and Pulpit Preaching
- ❒ ***Bible Studies***
  Studies on specific themes
  and select books of the Bible
- ❒ ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold
  Sound Doctrines of the Bible
- ❒ ***Youth Matters***
  Practical Guidelines to Young Men
  and Young Women for Successful Living
- ❒ ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons
  on Christian Leadership
- ❒ ***Missionary Challenge***
  Calling Christians to obey
  the Great Commission of Christ
- ❒ ***My Answers***
  Answers to Questions
  frequently asked but rarely answered
- ❒ ***Quotable Quotes***
  Stanley's analytical Statements
  about Christian Life and Ministry

Register your e-mail id in this website
to receive updates instantly.

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**8 சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org



**Blank page with page number**